
# திராவிடநாடு

29—3—59 | வார வெளியீடு | விலை 16 காசு



9—3—59ல் காஞ்சி நகரசபை, கலைஞர்களான கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோருக்கு வரவேற்பளித்துப் பாராட்டியது. நகரசபைத் தலைவர் வி. என். பெருமாள் அவர்கள் கலைஞர்கள் மத்தியில் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம்.

# 'எம். எல். ஏ. எண்பதாயிரம்'!

"முகில்"

'எம். எல். ஏ. எண்பதாயிரம்'—ஆம்! அப்படித்தான் அவரது தொகுதிக்காரர்கள் அவரை அழைப்பது வழக்கம்!

எப்படி இந்தப்பெயர் வந்தது? என்னென்னவோ காரணம் சொல்லுகிறார்கள்! எதைச் சரியானதென்று நாம் சொல்ல முடியும்?

தேர்தலுக்கு அவர் எண்பதாயிரம் செலவு செய்து வெற்றி பெற்றார்; எனவே இந்தப் பெயர் ஏற்பட்டது—இது ஒரு விளக்கம்!

என்னவோ வெங்காயப் பர்மிட்டாம்...வேறேதோ பர்மிட்டாம்... அதுவும் யாரார் பெயரிலோவாம், அதில் சம்பாதித்தது எண்பதாயிரம்—இது மற்றொரு விளக்கம்!

'எண்பதாயிரம்' என்று சரியாகப் 'புள்ளிவிவரம்' தந்த புண்ணியவான் யார்? மற்றொரு புதிர்!

அந்த எம். எல். ஏ-யின் உண்மையான பெயர்தான் என்ன? தெரியாது—தேவையுமில்லை! ஆனால் அவருக்கு 'எண்பதாயிரம்' என்று பெயர் உண்டு என்று மட்டும் சத்தியம் செய்ய, நம்பத்தகுந்த வட்டாரங்களில் பலர் இருக்கிறார்கள்!

போகட்டும், பெயர் ஆராய்ச்சி ஏன்?

அவர் அன்று காலை வழக்கத்திற்கு மாறாக 5-மணிக்கே எழுந்துவிட்டார்!

எழுதிவைத்த காகிதங்கள் சிலவற்றை, மாடி அறையில், குறுக்கும் நெடுக்குமாக நடந்தவாறே படித்துக்கொண்டிருந்தார்-இடையிடையே முக'பாவ'த்தில் மாறுதல்கள்—'முஷ்டி'யை ஓங்கிக் கொண்டு யாரையோ குத்தப் போவது போன்ற 'பாவனை'—குரலில் அழுத்தம்! சற்று உரக்கப் படித்துக்கொண்டிருந்தார்!

ஆனால், அவர் என்ன படித்துக் கொண்டிருந்தார் என்று எங்கே புரிகிறது, பக்கத்து அறையிலிருந்த அவரது செல்வங்கள் 'சில' அவருக்கு முன்னாலேயே எழுந்து,—எழுந்ததுமுதல் எழுப்பிக்கொண்டிருக்கிற 'கூச்ச'லில்! அவைகளும்தான் படிக்கின்றன—எனவே 'மிஸ்டர் எண்பதாயிரம்! இடையிடையே முகத்தைச்சுளித்துக் கொண்டாலும் கண்டிக்க முன்வரவில்லை! முடியவில்லை!

இப்படியே இரண்டுமணி நேரம் கழிந்தது—எம். எல். ஏ. நடந்த வண்ணமிருந்தார், நடையின வேகம் சற்று அதிகரித்தது. --அதாவது படிக்கின்ற 'பாட'த்திலும் கொஞ்சம் சூடு பிடித்துவிட்டது என்று பொருள்.

'செல்வ'ங்கள் டிபன் அருந்தப் போய்விட்டன—அப்போதுதான் மிஸ்டர் எண்பதாயிரத்தின் குரல் தெளிவாகக் கேட்டது!

"என்ன தெரியும் இவர்களுக்கு? வடக்கு—தெற்கு என்று இடக்குப் பேசுபவர்களை மடக்கி விடுவோம், ஜாக்கிரதை!"

ஒரு சமயம் "இடக்கு" என்ற வார்த்தைக்குப் பொருள் என்ன என்று சந்தேகம் வந்துவிட்டதோ என்னவோ, அகராதி வரவழைக்கப்பட்டது, மூத்த மகனிடமிருந்து!

அவசர அவசரமாகப் புரட்டினார்—முகத்தில் அச்சக்'களை'யோடு ஆராய்ச்சிக்'களை'யும் கொஞ்சம் தட்டியது—முடிவில் ஒரு புன்னகை! தலை தானாக ஆடியது—வெற்றியின் அறிகுறியாக! அன்று இமயத்திலே கொடி பொறித்த சேரன் செங்குட்டுவன் கூட இவ்வளவு மகிழ்ந்திருக்க மாட்டான்! ஆள்காட்டி விரல்மிக வேகமாக அசைந்தது, எதிரியை அச்சுறுத்துகிறபாணியில்!

திடீரென்று அவரது இல்லக்கிழத்தியின் குரல்! "ஏங்க...இன்னும் டிபனுக்கு நேரம் ஆகலியா!" அவ்வளவுதான்! அலறியடித்துக்கொண்டு ஓடிப்போய்ச் சாப்பிட அமர்ந்தார்—அப்போதுதான் அவருக்கு நினைவு வந்தது, தான் இன்னும் பல் துலக்கவில்லை என்ற உண்மை! ஆனால் அதைக் காட்டிக் கொள்ளலாமா மனைவியிடம்? சாப்பிட்டுவிட்டார்!

குளிக்கப்போனார்—ஆனால் வெந்நீர் இன்னும் தயாராகவில்லை என்று தெரிந்ததும், 'அரைக் குளியல்' ஒன்றுபோட்டு—அதாவது முகத்தை மட்டும் அலம்பிவிட்டு—உடை மாற்றினார்! மாற்றிக்கொண்டு இருக்கும் போதே நேரமாகிவிட்டது நினைவுக்கு வரவே, வேலைக்காரன் வேம்பனுக்கு ஆணையிட்டார் "இதோபார்! மேலே சில காகிதங்களை எழுதி வைத்திருக்கிறேன். அதை எடுத்து 'லெதர் பேக்'கில் போட்டுக் காரிலே கொண்டுபோய் வை! உம்! சீக்கிரம"

ஓடினான் அவன், பதைபதைப் போடு!

அதற்குள் அவரது சின்னக் குழந்தை ஒன்று—ஆறு வயதுதான இருக்கும்—ஓடி வந்தது, 'சிலேட்'டில் தான்போட்ட படத்தைக் காட்டிக்கொண்டே!

பார்த்தார் மிஸ்டர் எண்பதாயிரம்' முகத்தைச் சுளித்துக்கொண்டார்—மறு வினாடி 'சிலேட்' தூள் தூளாகியது!

அவரது மனைவியும் மூத்த மகனும் ஓடிவந்தார்கள், எதுவும் புரியவில்லை அவர்களுக்கு! குழந்தையோ தேம்பித்தேம்பி அழுதது! அவர்களுக்கென்ன தெரியும், குழந்தை போட்டுக் காட்டிய படம் "உதய சூரியன்" என்று!

"சார்! சார்!" வாசற்படியிலிருந்து ஒரு குரல்.

மூத்தமகன் பரபரப்போடு பாய்ந்தான்! அங்கு ஒரு பெரியவர் நின்றுகொண்டிருந்தார் "தம்பி! உங்க அப்பா இருக்காங்களா?" என்றார்.

"இருக்காங்க. என்ன வேணும் உங்களுக்கு?"

"இல்லை, அவரிடம் பேசவேண்டும், ஒரு சிபாரிசு விஷயம்! என் பையனுக்கு வேலை..."

அவர் முடிக்கவில்லை—அதற்குள் எம். எல். ஏ. வந்துவிட்டார் அந்த இடத்திற்கு!

அவர் பார்த்த பார்வை—அதிலே கம்பீரம் இருப்பதாக

(4-ம் பக்கம் பார்க்க)

# அந்த நல்ல பண்பு...!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [29-3-59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 37

மத்திய — மாநிலங்களின் நிர்வாகப் போக்கைப் பற்றிப் பலரும் கண்டித்தவண்ணம் உள்ளனர். வெறும் கிளர்ச்சிக்காரர்களாக இருந்தவர்கள் கையில் திடீரென்று நிர்வாகப் பொறுப்புக் கிடைத்துவிட்டால், அதனை அவர்களால் சமாளிக்க முடியாதென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சிறிது சிறிதாக நிர்வாகம் செய்யும் முறையைத் தெரிந்துகொண்டபின்னர்தான், அதனை இயக்கிச் செல்ல முடியுமென்பதையும் யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் "என்னைவிட நிர்வாகத்தை நடாத்திச் செல்ல யாரால் முடியும்?" என்ற போக்கில் ஆட்சிப் பீடத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பவர்களைப்பற்றி என்ன கூறுவது?

இன்றைய டில்லி அரசு தனது நிர்வாகத் திறமைக் குறைவை ஒப்புக்கொள்ள மறுக்கும் முறையில் காரியங்களை நடத்தி வருகின்றது. ஆட்சிப்பீடம் ஏறிப் பதினொரு ஆண்டுகளாகியும், இன்னும் எந்தத் துறையிலும் தனது நிர்வாகத்தைச் சரிவர நடத்த முடியவில்லை. எந்த இலாகாவை எடுத்துக்கொண்டாலும், அதில் ஊழலும் ஊதாரித்தனமும் மலிந்து கிடப்பதாகவே, அந்தந்த இலாகாத் தணிக்கைக் குழுவின் அறிக்கை கூறுகின்றது. ஆட்சிப் பொறுப்பை ஏற்று நிர்வாகத்தை நடத்திச் செல்லும் காலம் அதிகமாக அதிகமாக, நிலைமை திருந்தி நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இயங்கும் என்கிற நிலைமை மாறி, ஆளும் கால அளவைவிட அதிக அளவில்—அதிகவேகத்தில் ஊழல்கள் மலிந்தவண்ணம் உள்ளன. இதனை நாம் கூறினால், "இவர்களுக்கு வேறு வேலை ஏது? சர்க்காரையும் அது சார்ந்துள்ள கட்சியையும் குறை கூறுவதைத் தவிர இவர்களுக்கு என்ன தெரியும்" என்று கூறிக் கொள்வதிலே சுவைகண்டு மகிழ்பவர்களாயிற்றே நமது காங்கிரஸ் நண்பர்கள். அவர்கள் மட்டுமென்ன, நம்மைப் பிடிக்காதவர்கள்—நம்மைக் கண்டால் நடுங்குபவர்கள்—நம்மைப் பார்க்கும்போது நயமாகப் பேசி நாலடி எடுத்து வைத்ததும் நாவார வைபவர்கள் அனைவருமே நாம் பேசுவதிலே — எழுதுவதிலே குறை காண முயற்சிப்பவர்கள் தானே!

எனவேதான், இன்றைய ஆளுங்கட்சிக்கு நிர்வாகத் திறமை இல்லை. இல்லாதது மட்டுமல்ல — வரவர அது குறைந்துகொண்டும் வருகின்றதென்ற உண்மையை ஆளுங்கட்சியை ஆதரிக்கும் நிலையிலுள்ள ஏடுகளில் ஒன்றான "தினமணி" 21—3—59ல் வெளியிட்டிருக்கும் செய்தியை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

"குடி பெயர்ந்தோர் புனர் வாழ்வுக்காக மத்திய அரசாங்கம் வீடுகள், விடுதிகள், கடைகள் முதலியன கட்டித்தந்ததல்லவா? அவற்றுக்காகக் கொடுக்கப்பட வேண்டிய வாடகையில் சுமார் இரண்டுகோடி ரூபாய் பாக்கி நிற்கிறது. 1956 ஆகஸ்டிலேயே இந்நிலை.

பல இடங்களில் வாடகைப் பணத்தை வாங்கி ஏப்பம் விட்டுவிட்டு ஒரு அதிகாரி அந்தர்த்யானமாகிவிட்டார். போலீசார் மூன்று வருஷ காலமாக அவரைத் தேடி வருகின்றனர்.

சர்க்கார் சொத்துக்களைப் பற்றிச் சரியான கணக்கு வழக்கே காணப்படவில்லை. அதனால் ஒரு பகுதியில் மட்டும் பல வீடுகள் வாடகை விதிக்கப்படாமல் தப்பிவிட்டன. 1949-50லிருந்து சர்க்காருக்குப் பிரதி வருஷமும் பல்லாயிரம் ரூபாய்கள் நஷ்டம்.

ரசீது கொடுத்தால் உடனே புத்தகத்தில் பதிவு செய்வது என்ற பழக்கமே கிடையாது. அனுமதியில்லாமலேயே ஊழியர்களுக்கு ஏராளமான தொகைகள் வாரி வழங்கப்பட்டிருக்கின்றன.

1958 அக்டோபரில் 1-கோடி 8-லட்சம் ரூபாய் வாடகை, வரி பாக்கி நின்றது. பாக்கி நிற்கும் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. ஜரூர் நடவடிக்கை எடுக்காவிட்டால் அதை வசூலிக்கவே முடியாது என்பதைக் கமிட்டி வற்புறுத்தியுள்ளது. குடி பெயர்ந்தோர் புனர் வாழ்வு இலாகா அதிகாரிகளின் விளக்கமும், சால்ஜாப்பும் கமிட்டிக்கு திருப்தியளிக்கவில்லை"

தினமணியார் தரும் இந்தப் புள்ளிவிவரம் ஒரு துறையை மட்டும் எடுத்து விளக்குவதாகும். அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிலும் இதே விதமான குறைகள் கூறப்படுவது இப்பொழுது நடைமுறையாக அமைந்துவிட்டது. எந்த இலாகாவிலும் ஏதாவதொரு குறை — தவறு — தகராறு — தகாத செயல் இருப்பதை அந்தத் துறையின் தணிக்கைக்குழு எடுத்துக்காட்டிய வண்ணம் உள்ளது.

நிர்வாகம் என்பது, வறிதே 'பஞ்சசீலம்' பேசுவது போன்றதோ, அல்லது 'சோஷலிச பாணி' போன்றதோ அல்ல. அதற்குத் தனியொரு திறமை வேண்டும். ஆனால், அது ஒரு குறிப்பிட்டவர்களால் மட்டும் பெறக்கூடியதும், மற்றவர்களால் பெற முடியாததுமல்ல. யாரும் அந்தத் திறமையைப் பெறலாம் — நல்லெண்ணமும், எதனையும் நடு நின்று சீர்தூக்கி நெறிவழுக்கும் இயல்பும் பெற்றவர்களால்.

ஆனால், அந்த நல்ல பண்பு இன்றைய ஆட்சிப்பீடத்தில் இருப்போருக்கு இன்னும் ஏற்படவில்லை — ஏற்பட வேண்டுமென்பதுதான் எங்கள் விருப்பமுமாகும்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவரது எண்ணம்! பாவம், இருக்கட்டும்!

பெரியவர் மிரண்டுபோனார் "என்...பையன்...வேலை...சிபாரிசு..." என்று பயத்தில் உளறினார்!

"சிபாரிசுமில்லை, ஒண்ணுமில்லை போய்யா! உங்களுக்கு வேறு வேலையில்லே!" கர்ஜித்தார் எம். எல். ஏ.!

"புண்ணியவானே! நீங்க மனசு வைச்சால் நடக்குமுங்க! ஒருதரம் நேரிலே வந்து அந்த ஆபீசர் கிட்டே சொல்லிட்டீங்கன்னா..."

"நேரிலேயா! அதுக்கெல்லாம் எனக்கெங்கேய்யா நேரம்? எனக்கு ஆயிரம் ஜோலி!"

"ஏதோ பெரியமனசுபண்ணி..."

"போய்யா போ! பெரிய மனசாம் பெரிய மனசு! இப்படி ஒவ்வொருத்தருக்கும் பெரிய மனசு பண்ணிக்கிட்டிருந்தா, என் 'பிசினசு'குட்டிச் சுவருதான்!"

"இல்லிங்க...!"

எம். எல். ஏ. வேகமாக உள்ளே போனார். அறையில் தொங்கவிடப் பட்டிருந்த தன் புகைப்படத்தை எடுத்து வந்தார்!

"இந்தாய்யா! நான் வந்தா காரியம் முடியுமிங்கிறியல்ல! இந்த 'போட்டோ'வை எடுத்துக்கிட்டு போ, எனக்குப் பதிலா...".

பெரியவர் தலைகுனிந்த வண்ணம் வெளியேறிவிட்டார்.

"என்னப்பா இது!..." என்றான் பையன், திகைத்தவண்ணம்!

"சும்மா இரு! உனக்கென்ன தெரியும்?"-பதிலில் 'சூடு' நிறைய இருந்தது!

"அவர்களெல்லாம் உங்களுக்கு ஓட்டுப் போட்டவங்களாச்சே அப்பா!"

"சும்மாவா போட்டாங்க?......" என்றார் அலட்சியமாக."

உடனே சென்று, காரில் ஏறிக் கொண்டார், பெருமூச்சு விட்ட வண்ணம்!

"அப்பா! அசெம்பிளிக்கு இன்று நானும் வருகிறேன்"—இது மூத்த பையனின் வேண்டுகோள்!

மறுப்பாரா அவர்? தான் சட்ட மன்றத்தில் பேசுவதைத் தனது மகன் — அதுவும் கல்லூரியில் படிப்பவன் — கேட்க வருகிறான் என்றால், அவருக்குப் பெருமிதம் ஏற்படாமலா இருக்கும்!

ஆனாலும், மகிழ்ச்சியைவெளியே காட்டிக்கொள்ளாமல், "சரி சீக்கிரம்" என்றார். கார் புறப்பட்டது.

"பையனென்றால் இவனல்லவா பையன்—சிலது சுத்துகிறதுகளே தறுதலையாக, கழகத்தில் சேர்ந்து கொண்டு! — இப்படியல்லவா இருக்கவேண்டும்! என் பேச்சைக் கேட்க இவனுக்கு எவ்வளவு ஆசை"—என்று, சொல்லவில்லை, சிந்தனைக் குதிரையைத் தட்டி விட்டார்!

இன்னும் என்னென்னவோ எண்ணங்கள்! அவற்றையெல் லாம் விளக்குவானேன்?

கார் கோட்டை வாயிலுள் நுழைந்தபோது மிஸ்டர் எண்பதாயிரத்தின் கண்கள், தாமாக, அகலத் திறந்துகொண்டன! சுற்றுமுற்றும் பார்த்தார்! எங்கெங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம்! இளைஞர்கள், முதியோர், பெண்டிர்!

அசெம்பிளிக்குள் நுழைவதற்குப் பெரிய 'க்யூ' நின்றுகொண்டிருந்தது. ஈசல்களைப்போல் போலீஸ்காரர்கள் சுற்றிய வண்ணம் இருந்தனர்.

இவ்வளவையும் பார்த்தார்—மகிழ்ச்சிக் கடலிலே நீந்தினார்!... "இவ்வளவு பேரும் என் பேச்சைக் கேட்க..."—இந்த எண்ணம் வந்ததோ என்னவோ காலிடறியது — அதாவது வாசற்படியைக் குனிந்துபார்க்க விரும்பாமல் தலை நிமிர்ந்து நடந்தார்!

இருந்தாலும் அந்தச்சமயத்தில் காலில் காயம் ஏற்பட்டதைக் காட்டிக் கொள்ளமுடியுமா என்ன? பறந்தார்!

காவலாளி ஒருவன் வரவழைக்கப்பட்டான். அவனுக்கு ஆணை பிறந்தது, தன் மகனை 'சபாநாயகர் காலரி'யில் அமரவைக்குமாறு!

இவ்வளவையும் செய்து முடித்து, தன் இடத்தில் போய் அமரும்போது சரியாக மணி 9-25!

இன்னும் 5 நிமிடங்கள்தான் பாக்கி — கேள்வி நேரம் முடிந்து விடும்!

பிறகு பேசவேண்டியவர்களில் முதலில் தன் பெயர் இருந்தாலும் இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில், அவசர அவசரமாக 'லெதர் பேக்'கைத் திறந்தார்—தேடினார்!

ஆம்! பேசுவதற்காக அவர் எழுதிவைத்திருந்ததைத் தேட வேண்டியதாயிற்று! தேடித்தான் என்ன பலன்?

அவரது 'பேச்சு' அங்கே இல்லை —சிற்சில மனுக்கள் இருந்தன, அதுவும் 'பர்மிட்' மனுக்கள்!

"பாவி, மானத்தைப் போக்கி விட்டானே!" மனதுக்குள்ளே சபித்துக்கொண்டார், வேலைக்கார வேம்பனை!

அவனுக்கென்ன தெரியும்! "எழுதப்பட்ட காகிதங்களை எடுத்துவை"என்றவுடன் கையில் கிடைத்ததை எடுத்துப் பைக்குள் திணித்தான்! எஜமான் செய்த அவசரத்தில், "இதுதானே, எஜமான்" என்று காட்டக்கூட அவனுக்கு நேரமில்லை!

அதையெல்லாம் சிந்திக்க எம். எல். ஏ. எண்பதாயிரத்துக்கு மட்டும் நேரம் இருந்ததா என்ன?

கடைசியில் தான் பேசப்போவதில்லை என்பதைச் சொல்ல வேண்டிய இடத்தில் 'பக்குவ'மாகச் சொல்லிவிட்டு 'லாபி'யில் உள்ள 'சோபா'வில் சோர்ந்து போய்ச் சாய்ந்தார். 'சிகரட்' கொளுத்தப்பட்டது—சுருள் சுருளாகப் புகை! என்னென்னவோ எண்ணங்கள்!

"இவ்வளவுபேர் என் பேச்சைக் கேட்க வந்திருக்கிறார்கள்—வாய்ப்புப் போய்விட்டதே" என்ற வருத்தம் — "இவர்களெல்லாம என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள்" என்ற வினா—"ஐயோ, அடுத்தவருஷம் தேர்தல் ஆயிற்றே' இந்தத் தடவையும் பேசவில்லையென்றால் எப்படி ஓட்டுக்கிடைக்கும்!" என்ற அச்சம் -"வேலைக்காரன் வேண்டுமென்றே செய்திருப்பானோ" என்ற ஐயப்பாடு—இவற்றிற்கிடையே திக்குமுக்காடினார்!

திடீரென்று எங்கும் அமைதி!

பரபரப்போடு பலர் ஓடினார்கள், அசெம்பிளி மண்டபத்தை நோக்கி!

ஒன்றும் புரியவில்லை அவருக்கு!

ஒருவரைத் தடுத்து நிறுத்தி "என்ன, என்ன?" என்றார்!

அவருக்குப் பதில் சொல்லக் கூட நேரமில்லை, அதற்குள் அவர் பேசத் தொடங்கிவிட்டால் என்ன செய்வதென்ற பயம்—மேலும் விரைவாக ஓடலானார்.

அப்போதுதான் புரிந்தது, அன்று 'காலரி'யில் கூட்டம் அதிகமாக இருந்ததன் இரகசியம்!—தன் மகன் அசெம்பிளிக்கு அவ்வளவு ஆர்வத்தோடு வந்த காரணமும் விளங்கியது!

அடுத்த 15 நிமிடங்களில் அவர் அந்த 'சோபா'விலே இல்லை—வீட்டிலேயிருந்த சோபாவில்! ❋

# ஒளியினைக் காணமுடியுமா?

இரா. மாணிக்கம்

அன்புள்ள சேரனுக்கு,

உன் முத்துப்போன்ற எழுத்துக்களைக் கண்டேன். எப்போதும் தமிழர்களின் அவலநிலை பற்றியே ஈழத்திலிருந்தும், மலேயாவிலிருந்தும், தென் ஆப்பிரிக்காவிலிருந்தும் அஞ்சல்களைப் பெற்றுப் பழகிப்போன நான் உன்னிடமிருந்தும் அத்தகைய ஒரு மடலை எதிர்பார்த்ததில் தவறில்லை, என்றாலும் "புயலிடைத் தென்றல்" என்று கண்ட என் கண்கள் உண்மையிலேயே இன்பக்கண்ணீர் வடித்தன. பரவாயில்லை, சேரனாவது செழுமையாக வாழ்கின்றானே என்று எண்ணினேன். பின் உன் மடல் முழுதும் படித்தேன். இடையிடையே நீ கொடுத்துள்ள குறிப்புகள் — உள்ளம் உருக்கும் உண்மைச் செய்திகள் என்பதை நீயும் நானும், நாம் சார்ந்திருக்கும் கழகமும் மட்டுமே உணர்கின்றோம், 'உணர்கின்றோம்' என்றுதான் என்னால் கூறமுடிகிறது. உணர்கின்ற நம்மால் உதவ முடியவில்லையே என்று எண்ணும்போது நம் கைகளைக் கட்டியிருக்கிற அடிமை விலங்கு என்றுதான் அறுபடுமோ — உடன் பிறந்து அயலகத்தில் வாழும் தமிழர்களின் வாழ்வு வளமுறுமோ என்று எண்ணி யெண்ணி உருகுகின்றேன். என்றாலும், எல்லோருக்கும் மூத்தவர், முதன்மையானவர் எப்போதும் நமக்குக் கூறுவாரே, "எண்ணமே செயல்" என்று. அதை எல்லோரிடத்திலும் உண்டாக்கவேண்டும். உனக்கும் எனக்கும் இருக்கின்ற இவ்வுணர்ச்சி தமிழர்களின் உள்ளமெல்லாம் உண்டானால் எத்தகைய மாறுதல் உண்டாகும்! அப்பப்பா! எண்ணவே இனிக்குதையா. அதைத்தானே அந்த மியான்பூர் தமிழர்கள் செய்துள்ளார்கள். சேரா, இதை எண்ணும்போது என் உள்ளம் குறுகுகிறது. வெட்கம் என்னைத் திரையிட்டு மறைக்கிறது. வாழ்வுக்காக அயலிடம் சென்ற தமிழனுக்குள்ள உணர்ச்சி கூடத் தமிழகத்தில் பிறந்து, தமிழகத்தின் மண்ணிலே தவழ்ந்து, தமிழகத்தில் வாழ்ந்து, தமிழகத்தின் உப்பினை உணவாகக் கொள்ளுகின்ற தமிழ்நாட்டின் மக்களுக்கு ஏற்படவில்லையே என்று எண்ணும்போது வெட்கப் படாமல்—வேதனையை அடையாமல் வேறென்ன செய்வது? 'மியான்பூர்' வாயில்கூட நுழைய மறுக்கும அத்தகைய ஊரின் பெயரையே 'வள்ளுவர் நகர் என மாற்றியுள்ளோம் நாங்கள் — "நீயென்ன செய்கிறாய்? உனக்கும், தமிழக மக்கட்கும் மான உணர்வு என்பதே இல்லையா?" என்று நீ உன் மடலில் இடித்துரைப்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது.

தமிழகத்தின் செய்தி இதழ்களை நாள்தோறும் விடாது படிக்கும் பழக்கமுடையவன் நீ என்பது எனக்குத் தெரியும். அவைகளில் நீ படித்திருப்பாய் என்று எண்ணுகின்றேன். வண்டமிழ்ச்சொல்லாம் 'வானொலி' இருக்க, அயல்மொழிச் சொல்லாம் 'ஆகாஷ்வாணி' வேண்டாம் என்று பட்டி தொட்டிகள், கல்லூரிகள், பள்ளிகள், தமிழகத்தின் மூலைமுடுக்குகள் அனைத்திலும் கிளர்ச்சிகள் நடப்பதை. அத்தோடு ஆகாஷ்வாணியை நீக்கும்படி இருதமிழ இளைஞர்கள் "உண்ணா நோன்பு" கொண்டதையும் நீ அறிவாய். மேலும் தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் பலர் 'ஆகாஷ்வாணி' என்ற சொல் நீக்கும் வரை வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதில்லை என முடிவெடுத்திருப்பதையும் நீ அறிவாய். இவற்றையெல்லாம் ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால், இங்கு உணர்ச்சி இருக்கிறது—பரவுகிறது — காலம் கனிகிறது—என்பதை உனக்கு உணர்த்தவே. "காலத்தின் கோலத்தால் கனம் ஆகியிருக்கின்ற அமைச்சர்கள் நம்மீது கணை வீசுகின்றார்களே! அவர்களெல்லாம் தமிழர்களில்லையா?" என்று நீ கேட்பதும் நன்றாகத் தெரிகிறது. உண்மையிலேயே அவர்களெல்லாம் தமிழர்கள்தான் ஐயமே வேண்டாம் உனக்கு. அவர்களெல்லாம் மறத் தமிழர்கள். 'ஐயா' மொழியிலே சொன்னால் அப்பழுக்கற்ற பச்சைத் தமிழர்கள்தான். நீ கூறியுள்ளாயே சிலர்பற்றி. அதைப் போல் இவர்கள் 'மதராசிகள்' அல்ல. தமிழர்களேதான்! அப்படியிருக்க இப்படியெல்லாம் ஏன் நம்மையும், நம் போராட்டங்களையும் பார்த்து 'முட்டாள்தனமானது' 'சிறுபிள்ளைத்தனமானது' என்று கூறுகின்றார்கள் என்றால், அவர்கள் ஆற்றும் பணி அமைச்சர் பணியல்லவே—'கங்காணிகள்' ஆற்றும் பணி என்பதிலிருந்தே நீ புரிந்துகொள்வாய். கங்காணிகளிடமிருந்து வேறெதை நீயும் நானும் எதிர்பார்க்க முடியும்? இந்தக் கங்காணி மனப்பான்மை நீங்கித், தாமே தம் காரியத்தைக் கடமையுணர்ச்சியோடு செய்யும் வாய்ப்பு நமது அமைச்சர்களுக்கு ஏற்பட்டுவிட்டால் நாமெல்லாம் இவ்வளவு தொல்லையும் துயரமும் படவேண்டியதில்லையல்லவா?

டால்மியாபுரம் கல்லக்குடி ஆகவில்லையே என்று பெருமூச்சு விட்டு உன் உள்ளத்தினை எழுத்தால் வடித்துக்காட்டி. இடித்துக் காட்டும் உன குறும்பையும் நானறிவேன். கவலைகொள்ளாதே! நம்முடைய கொள்கைகள்

(7-ம் பக்கம் பார்க்க)

# பூதப்பாண்டியன் தேவியார்

[சிறுவை, அநுசூயா—மோகனசுந்தரம் 'மகளிர் மன்றம்']

தமிழகத்தின் சிறந்த புலவருள் பூதப்பாண்டியன் தேவியார் பெருங்கோப்பெண்டும் ஒருவர். இவரது பெயரால் இவர் ஒரு பெண்பாலார் என்பது சொல்லாமலே விளங்கும். தமிழக சங்க கால ஆடவரும் மகளிரும் ஒத்த கல்வியும், ஒத்த அறிவும், ஒத்த பண்பும் உடையவர்களாகவே திகழ்ந்தனர்.

'நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே
தைமைத்தே'

என்ற பிற்காலப் புல்லறிவாளர்கள் கூற்றுக்குச் சான்றில்லாது சங்ககாலத்தில் வாழ்ந்த ஆண் பெண் இருபாலரும் நற்றமிழ்க் கல்வியிலும், ஆற்றலிலும் அறிவிலும், குற்றமில்லாத ஒழுக்கத்திலும் சிறந்தே விளங்கினார்கள். ஆசிரியர் தொல்காப்பியனார்கூட ஆண் பெண் இருபாலார்க்கும் அறிவின் ஒற்றுமையைக் கூறுகின்றார். பெண்பாலார்க்கே சிறந்து விளங்கிய யாழ் முதலிய கலைகளிலும் ஆண்பாலார் பலர் சிறந்து விளங்கினார்கள். மேலும் பெண்களுக்கென்றே புகட்டிய மடைநூற் செய்தி (சமையற்கலை) ஆண்களும் நன்கு பயின்று தேர்ந்த செய்தியும் கிடைக்கின்றது. இதற்கு நளனையும் வீமனையும் சான்றாகக் கூறுவர். 'நன்மக்கள் எங்கே பிறந்தாலும் என்'? என்ற அறிவின் பெருமையைப் பறைசாற்றியது தமிழ்நாடு. 'எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும் அக்குடியிற் கற்றோரை வருக' என்றழைத்தது இந்தத் தமிழ்நாடு. கோப்பெருஞ்சோழர் எனும் மன்னர்க்கு உயிர்த்துணையாய் நின்றவர் 'பிசிராந்தையார்' என்னும் ஆண்பாற் புலவர். அதியமானுக்கு உயிர்த்துணையாய் நின்றவர் ஔவை மூதாட்டியாகிய பெண்பாற் புலவர்.

இவைகளையெல்லாம் நன்கு ஆராயின் பண்டைத்தமிழர் ஆண் பெண் இருபாலர்க்கும் உடலமைப்பு வேற்றுமையல்லாது பிறிதொரு வேற்றுமையைக் கண்டதாக நமக்கு எங்கும் சான்றுகள் கிடைக்கவில்லை. இங்ஙனம் ஒத்த கல்வியும் பண்பும் உடைய ஒரு பெண்பாற் புலவரே இப்பூதப் பாண்டியன் தேவியார்.

பொதுவாகச் சேர சோழ பாண்டியருள் பாண்டியர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர்.

"............பாண்டிய நின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்'

என்பது ஔவையார் கூற்று.

'......தமிழுடையான்
பல்வேற் கடற்றானைப் பாண்டியன்...'

என்பது யாப்பெருங்கல விருத்தியின் மேற்கோள்.

இப்பாண்டிய நாட்டை ஆண்ட அரசர் பெருமக்கள் பலர் வீரத்தோடு நின்று அமையாது சிறந்த புலவர்களாயும் விளங்கினர். அவ்வரசர்கள் பாடிய பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் அழியாப் புகழ்பெற்று விளங்குகின்றது.

பாண்டியன் பன்னாடுதந்தான்
பாண்டியன் அறிவுடைநம்பி
பாண்டியன் கானப்பேர் தந்த
உக்கிரப் பெருவழுதி
பாண்டியன் ஆரியப்படை கடந்த
நெடுஞ்செழியன்
பாண்டியன் தலையாலங்கானத்துச்
செருவென்ற நெடுஞ்செழியன்
ஒல்லையூர்தந்த பூதபாண்டியன்

இப்பாண்டிய மன்னர்களாகிய இவர்களும், இவர்களையொத்த இன்னும் பலரும் புலமைச் செல்வர்களாய் விளங்கினர். இவர்களில் நற்றிணை 115, 228 ஆகிய தீஞ்சுவைப் பாக்களைப் பாடிய முடத்திருமாறன் எனபவன் கடைச்சங்கத்தை நிலைபெறச் செய்தான் எனக்கூறுவர்.

ஆகவே இத்தகைய கல்விச் சிறப்புடைய பாண்டியருள் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் மனைவியே "பூதப்பாண்டியன் தேவியார் பெருங்கோப்பெண்டு ஆவர். இவ்வம்மையார் நல்ல தமிழ்ப்புலமை பெற்று, இனிய கவிஞராய்த் திகழ்ந்திருக்கிறார். பெருங்கோப்பெண்டின் கல்வித் திறத்திலே — அவ்வம்மையாரது அறிவாற்றலிலே ஒன்றிய பூதப் பாண்டியன் அவரைச் சற்றும் பிரியாது நிழல்போல் அப்பெருமாட்டியைப் பேணிவந்தான். கற்பிற் சிறந்த பெருங்கோப்பெண்டும் கணவனைப் பிரியாது கணவனது அறிவோடு ஒத்த அறிவுடையவளாய்க் கணவனுக்குப் பல்வகையிலும் உறுதுணையாய் இருந்து வந்தாள். மேலும் பூதப்பாண்டியன் பெருங்கோப்பெண்டு மீது வைத்த அன்பிற்கு அளவே இல்லை. தான் தன் தேவியிடத்து எவ்வளவு அன்பினைச் செலுத்தி நின்றான் என்பதற்கு அவனது பாடலே சான்றாக அமைகின்றது.

'..........................
அவர்புறம் காணேன் ஆயின் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிபு'

பூதப்பாண்டியன் தனது வீரத்தைப்பற்றி வஞ்சினம் கூறிய வார்த்தைகளால் தெரியவருகிறது. தன்னோடு ஒத்த புலமையுடைய மெல்லியலார் ஆகிய பெருங்கோப்பெண்டையும் பிரியேன் என்று கூறும் வார்த்தைகள் நினைந்து நினைந்து இன்புறற்பாலது.

பெருங்கோப்பெண்டும் தன் கணவன் பூதப்பாண்டியன் இறந்தபோது அவன் பிரிவை ஆற்றாது தீக்குளிக்கிறாள். அவள் தீக்குளிக்கச் செல்லுங்கால், அதனைப் பலர் தடுக்கின்றனர். அப்பொழுது இந் நல்லிசைப் புலவர்,

'பல்சான் றீரே பல்சான் றீரே
..........................'

எனும் பாடலைப் பாடி கைம்மை நோன்பினை எள்ளி நகைக்கிறார். கருத்து எதுவாயினும் இப்புலவர் பெருமாட்டி பிறர்க்கு அறிவுறுத்தும் முறையில் சிறந்த நாகரிகத்தையும்பண்பையும்கைகொள்கிறார். இவரது புலமை நயம் இப்பாடலில் நன்கு விளங்குகிறது. மேலும் கைம்மை நோன்பின் சம்பிரதாயங்களை அறவே கண்டித்தும் கைம்மை நோன்பை வெறுத்தும் கூறுகிறார். அங்ஙனம் கூறும்

உரையில் பெருங்கோப்பெண்டின் புலமைத்திறம் நன்கு வெளிப்படுகிறது.

பெருங்கோப்பெண்டு தீக்குளிக்கும் காலை அவ்வம்மையாரைத் தடுத்தவர்கள், பலருள் பாண்டியன் பேரவையில் இருந்த புலவர்களுள் ஒருவராகிய மதுரை பேராலவாயர் எனும் புலவரேயாவர். தம்மோடு ஒத்த அறிவுடை அரசியை இழக்கலாகாது என்ற கருத்துபற்றியே தடுத்தார்கள். அங்ஙனம் தடுத்துக்கூறும் மதுரை பேராலவாயர் எனும் புலவர் பெருந்தகை,

'........................
சிறுநனி தமியள் ஆயினும்
இன்னுயிர் நடுங்குந்தன் இளமை புறம்
கொடுத்தே'

எனும் பாடலால் கணவன்மாட்டு பெருங்கோப்பெண்டு வைத்திருந்த அன்புடைமையை வியந்து கூறுகிறார்.

இங்ஙனம் பெருங்கோப்பெண்டின் வரலாறு சிறிதுதான்கிடைக்கின்றது. வரலாறு சிறியதே ஆயினும், கணவன்மனைவி ஆகிய இருவர் பாடலையும் புறநானூற்றிலே கண்டு இன்புறுகிறோம். தமிழ்கூர் நல்லுலகத்தில் 1800-ஆண்டுகட்குமுன் பெண்பாற் புலவர்கள், நல்லிசைப் பெருமாட்டிகள் அரசரோடு சரியாசனத்தில் அமர்ந்து பெருங்கவியரசிகளாய் விளங்கி இருக்கிறார்கள். இத்தகைய வரலாறுகளைக் காணும் இன்றைய தமிழ் மகளிர் உலகமும் விழித்தெழுந்து, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் என்றபடி முன்னேறி வருகின்றனர். அவ்வாறு முன்செல்லும் பெண்கள் உலகம் விஞ்ஞானம், கணிதம், மருத்துவம் முதலிய கலைகளோடு தமது தமிழ்ப்புலமையினும் சிறந்து விளங்குபவர்களாய் காவற்பெண்டுகளாய்த் திகழ்தல் வேண்டும் என விரும்புகின்றோம்.

குறிப்பு.- கணவன் இறந்துவிட்டால், மனைவி தீக்குளித்திறத்தல் என்ற வழக்கு இக்காலத்திற்கு எந்த விதத்திலும் ஒவ்வாத ஒன்று. என்றபோதிலும், அக்கால மக்கள் — ஆண் பெண் — இருபாலருமே சரியொத்த நிலைபெற்று, வாழ்ந்தனர் என்பதனை விளக்க இக்கட்டுரை பெரிதும் பயன்படுவது காண மகிழ்கிறோம். —ஆசிரியர்.

★

5-ம் பக்கத் தொடர்ச்சி

உண்மையானவை — உறுதியானவை. உறுதியானவற்றை ஒழிக்க ஒருவராலும் முடியாது. என்றேனும் ஒருநாள் அடைந்தே தீருவோம் நம் குறிக்கோளை.

இவ்வாண்டின் வரவு செலவு பற்றிய வாதத்தின்போது நம் உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயர்வையுங்கள் என்று கேட்டபோது, வெளியில் நம்மைப்பற்றி வசைபுராணம் பாடிவிட்டுச் சென்னை வந்து சேர்ந்த நம் நிதியமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள், "பெயரில் என்ன இருக்கிறது?" என்ற ஒரு கேள்வியைத் தமக்குத்தாமே போட்டுக்கொண்டு, "சென்னைதான் தமிழ் நாடாகும். 'தமிழ்நாடு என்றழைப்பதில் நமக்கெல்லாம் ஆசைதான்" என்று சொல்லுகின்றார். நன்கு கவனி அவரது பேச்சை. 'எனக்கெல்லாம்' ஆசைதான் என்று ஒருமையில் கூறவில்லை அவர். 'நமக்கெல்லாம்' ஆசைதான் என்று பன்மையிலே கூறியிருப்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார். தொடர்ந்து திருவாய் மலர்ந்தருளிய அவர் "சென்னை என்ற சொல் அரசின் ஏடுகளில்தானே பயன்படுத்தப்படுகிறது" என்றும்கூறுகிறார். இதிலிருந்துஎன்ன புரிகிறது தெரியுமா? நான் சார்ந்திருக்கும் 'கட்சிக்கே தமிழ்நாடு காங்கிரசு என்றுதானே பெயர் வைத்திருக்கின்றோம் என்று நினைக்கிறார்போலும்! சுருதி சிறிது இறங்குகிறது என்று அறிந்து கொள்.

டால்மியாபுரம் கல்லக்குடி என்றும், ஆகாஷ்வாணி வானொலி என்றும், சென்னை மாநிலம் தமிழ் நாடென்றும் அழைக்கப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எப்போது அது கைகூடும் தெரியுமா? நமது கரங்கள் ஓங்கும் போது. அதற்கு ஆவன செய்வதையே நம்முடைய கடமையாகக் கொண்டோமானால் நீ எழுதியுள்ளதுபோல் வெகு விரைவிலேயே பகுத்தறிவின் ஒளியினைக் காணமுடியும் எனக்கூறி முடிக்கின்றேன்.

அன்புள்ள,
**பொன்முடி.**

## இதோ ஒரு நற்சாட்சிப் பத்திரம்

**"எந்தக் கட்டத்திலும் காங்கிரஸ் கமிட்டிகளுக்கு மக்களுடைய வாழ்க்கை விஷயமாகப் பொறுப்பு என்பது சிறிதளவும் கிடையாது. அது வெறும் கிளர்ச்சி ஸ்தாபனமாக இருந்து, இப்பொழுது வோட்டுப் பண்ணையை நடத்தி வருகிறது."**

## உதாரணம்

"திருவாரூர் நகரசபைத் தேர்தலில் 14 ஸ்தானங்களில் 13 ஐக் காங்கிரஸ் கைப்பற்றி உள்ளது."

—"தினமணி"
22—3—59.




சென்ற இதழ் தொடர்ச்சி....

எனக்கிந்த அனுபவம் எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை. இத்தகைய ஜோடிப் பிரயாண சுகமே, நான் கண்டறியாத ஒன்று. கையால் தவறியும் பெண்ணைத் தொடக்கூடிய சந்தர்ப்பம் கூட எனக்கேற்பட்டதில்லை. அப்படியென்றால் எனக்கெப்படி இருந்திருக்கும்? தேன், சொட்டுச் சொட்டாக, வாயில் வந்து விழுவதைப் போலிருந்தது என்று சொல்லவா? பட்டும் படாதது மாய்க் கதைவந்தது. பார்ப்பதும் பார்க்காததுமாய் நிலைமை வளர்ந்தது. ஆசையாகவும் இருந்தது. அவஸ்தையாகவும் தெரிந்தது. இன்பமும் தட்டாமல் இல்லை. துன்பமும் தலைகாட்டாமல் இல்லை. என்னசெய்வது? வெட்டிவெட்டிப் பேசினாலும், அவள் சலிக்காமல் ஒட்டி ஒட்டியே பேசி வருகின்றாள். நிச்சயமாக என்னையவள் விடமாட்டாள்போல் தெரிகின்றது! மிக்க மகிழ்ச்சியே!! அப்படியென்ன இருக்கிறது என்னிடம்? முன்பிருந்ததைப்போன்ற கல்லான இதயம், அவள் விஷயத்தில் இப்போதில்லை. எனக்கே புரியாத புதிராகத்தான் இருந்தது. கல்லையும் மனம்வைத்தால் கோதையர் கரைத்துவிடுவார்கள்.

"எங்க போகணும் சார்? அப்ப கேட்டதுக்கே இன்னும் பதிலில்லே" திமிரான அவன் பேச்சைக் கேட்டு, நான் சரியாகச் சொல்லிவிட்டேன். என்ன கஷ்டப்பட்டாலும் இயற்கையாகவே மனிதனுக்கிருக்கிற அந்தக் கிண்டல் போவதில்லை. எதையோஒன்றைத் தன்னிடமிருந்து எடுத்துப் பார்த்து, திரும்பவும் அவள் பத்திரமாக வைத்துக்கொண்டாள். முன்பிருந்ததைவிடமோகனச்சிரிப்புக்காரி உற்சாகமாய்க் காணப்பட்டாள். மேலே மேலே வேண்டுமென்றே எதிர்பாராவிதமாக என்மேல் சாய்வதைப் போலவே நடித்தாள். எனக்கா அதைத் தெரிந்து கொள்ளுவது கஷ்டம்? என்னிடமிருந்த ஒரு பெரிய தோல்பையை எடுத்து, கன்னிக்கும் எனக்கும் மத்தியில் கச்சிதமாக வைத்துவிட்டேன். போகட்டுமென்று விட்டாளா பட்டுடல்காரி? பார்ப்பதைப்போல் எடுத்து அப்படியே வைத்துக்கொண்டாள். வெடுக்கென்று நான் பிடுங்கிக்கொள்ள மனம் வரவில்லை. குரங்காயிற்றே மனம்! என்னருகில் நெருங்கி உட்கார, எவ்வளவோ அவள் பிரியப்படுகிறாள். எனக்கும் விருப்பம் இல்லாமல் இல்லை. நான் என்ன மரமா? அவளைப்பற்றிய சரியான ஒரு முடிவிற்கு, இன்னும் என்னால் வரமுடியவில்லை.

நான் நிறுத்தச் சொல்லி இறங்கி, கால்சட்டைப் பையில் இரண்டு கைகளையும் போட்டுக் கொண்டு, மெதுவாக நடந்தேன்.

**வி. ஆர். துரை**

"என்ன சார்! நம்மைக் கவனிக்காம போறியே?" அவன் குரல் கேட்டுத் திரும்பிவந்தேன். பணம் இருக்கின்ற பை அவள் கையில் மாட்டிக்கொண்டு இருக்கிறது. தலை நிமிர்ந்து சிலை நிகர் வடிவத்தாளைப் பார்த்தேன். கண்வலை வீசினாள்; புன்முறுவல் பூத்தாள். "எதற்காக இறங்கிவிட்டீர்கள்? ஏறி உட்காருங்கள். பரவாயில்லை" திறந்து பேசிய சிவந்த வாயை மூடினாள். அலட்சியமாக அவளைப் பார்த்தேன். "அம்மா மேலே ஐயாவுக்குக் கோபமோ! சும்மா ஏறி உட்காருங்க சார்! நீங்க ஒன்றும் பயப்படாதிங்கம்மா. ஐயா, சும்மா மிரட்டிப் பார்க்குறாரு!" இவன் தொல்லை வேறு எனக்கு. சில்லறையை அந்தக் கிண்டல்காரனிடம் கொடுக்கச் சென்றேன். அவன் வாங்கிக்கொள்ளாமல் வண்டியை இழுக்கத் தயாராக நின்றான். அப்படியவள் ஜாடையால் சொல்லியிருக்கவேண்டும். வேகமாக நடந்துகொண்டிருந்த என்னைத் தாண்டி, வனிதாமணி அமர்ந்திருந்த வண்டி ஓடியது. வண்ணமலர் வீசிய பைவந்து என கழுத்தில் மாட்டிக் கொண்டது.

"என்னம்மா உங்கமுகம் எப்படியோ ஆயிடுச்சி! பால் வடியிற மாதிரி கொஞ்சம்முன்னாலே இருந்தது. பாவம், வாடிப்போயிடுச்சே! இதுக்கு போயா கவலை? ஐயா, எங்கே போயிடுவாரு? ஒரு சுத்து சுத்தி கால்வலிச்சா, ஓடிவந்து பேசாம சேருவாரு. புத்தியில்லாத மனுஷன்!"

"டேய்! வாய் மூடின்னு வண்டியை இழுடா"

"ஓ, கோபம் இருந்தாலும், அன்பு மட்டும் போகாதமாதிரி இருக்கே!"

இந்த உரையாடல் என் செவியில் வந்து விழுந்தது. எனக்கப் போது பரிதாபமாகக் கூடத்தான் இருந்தது. எவ்வளவு நல்லவள்! அந்தக் கொலைக்கும் இவளுக்கும் சம்பந்தம் இருக்குமா? இருக்காது! அந்தளவுக்கு என் உள்ளம் பக்குவமடைந்து கொண்டே வந்துகொண்டிருந்தது. அதன் வளர்ச்சியில் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டது. பொறுமைக்குப் பெருமையளிக்கும் புனிதவதியைத் திரும்பவும்

நான் பார்க்க முடியாதென்றே நினைக்கின்றேன். அப்படியல்லவா இதயமில்லாமல் அவளிடம் நடந்துகொண்டேன்.

*

நான் நினைக்கவே இல்லை. எவ்வளவு இழிவாக நடந்துகொண்டேன். இப்பொழுது நினைத்தால் கூட வெட்கமாக இருக்கின்றது. அவமானம் பிடுங்கித் தின்னுகின்றது. எவ்வளவுதான் அழகுச் சுந்தரனாக இருந்தாலும், ஒரு பெண் இப்படியா வலியச் சென்று நடந்துகொள்ளுவது? பெண் இனத்திற்கே என்னால் பெருத்த அவமானமாகும். குழந்தை உள்ளம் கொண்ட அவரை, எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. 'அந்த' சபலம் தட்டிவிட்டது. எனக்கு பொன்வேண்டாம்; பொருள் வேண்டாம்; இந்த உலகம் வேண்டாம். அவர்தான் வேண்டும். குவலயத்தையே அவருக்கீடாகக் கொடுத்தாலும், அதை என் கால் தூசாகவே கருதுவேன். உண்மையிலேயே நான் எவ்வளவோ பணிவாகவும் அன்பாகவும் நெருங்கிப் பேசிப்பார்த்தேன். அதை நினைத்தபோது எனக்கே மிகவும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனாலும் என் வழிக்கு அவர் வரவே இல்லை. அவர் வழியிலேயே என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார்.

நான் என் செய்வேன்? மீண்டும் அவரை நானும், என்னை அவரும் என்ன காரணத்திற்காகவாவது சந்திக்கக்கூடும் என்று நினைப்பதற்கே இடமில்லை. எனக்கென்னவோ இதயம் கவர்ந்த உதய சூரியனைக் காணவேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும், வெற்றி [illegible]டந்துகொண்டே வருகின்றது. இனந்தெரியாத ஒரு வேதனை அவர் இதயமெனும் அரியணையில் உரிமையுடன் உட்கார்ந்துகொண்டு, என்னை அரசு புரிகின்றது. கொத்தி என்னைத் தின்னும் வேதனை, குணாளனைக் கண்டால்தானே குணமடையப் போகின்றது. அதுவரையில் நான் செத்துக்கொண்டிருக்க வேண்டியதுதானா?

என் தந்தையார் ஒரு நல்லவர். அப்படித்தான் எல்லோருமே சொல்லுகின்றார்கள். ஒரு பெரிய தோல்ஷாப்பிற்குச் சொந்தக்காரர். அவர் எவ்வளவோ சம்பாதித்திருக்கிறார். நஷ்டமடைந்ததும் அவ்வளவு இருக்கும். திரைகடல் ஓடியும் திரவியம் சேர்ப்பதிலே கெட்டிக்காரர். தம் மேலே அவருடைய காற்று வீசியதாலே—கண்பார்வை பட்டதாலே, தலைகால் தெரியாமல் ஒரு சிலர் இப்பொழுது ஆட்டம் போட்டுத் திரிகின்றார்கள். அதையெல்லாம் நினைக்கும்போது மனதிலே கொஞ்சம் வருத்தந்தான். அதுபோய்த் தொலையட்டும். தீமை செய்யத் தெரியாதவர். நெஞ்சில் நல்லெண்ணம் கொண்டவர். ஒழுக்கத்தில் உயர்ந்தவர். உதவி செய்யும் மனப்பான்மை உடையவர். 'பெண்ணை எதற்குப் படிக்கவைக்க வேண்டும்? கெட்டுவிடுவார்கள். வீட்டில் கட்டுப்போட்டு வையுங்கள். கல்வி கற்கச் சென்று, காதல் புராணம் செவ்வனே கற்று வருவார்கள். சாதிபேதமென்று குதர்க்கம் பேசுவார்கள். சரிசமமாக உட்கார்ந்து அரட்டை அடிப்பார்கள். கலப்பு மணம் செய்துகொண்டாலென்ன என்று கேள்வி போடுவார்கள்'' என்றுபதேசம் செய்த 'அறிவாளிகளை' உதாசீனஞ் செய்து என்னை நன்றாகப் படிக்கவைத்த குரு.

உல்லாச நகர் சென்னையிலே, ஏதோ கொண்டாட்டமாம். அங்கிருந்து என் தந்தைக்கு அழைப்பு வந்திருந்தது. வசந்த துரை வரச் சொல்லி இருந்தார். இரண்டு பேரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். வளர்பிறை போன்றே வம்புகள் நிறைந்த இக்காலத்தில்; அவர்கள்தம் நட்பு வளர்ந்து வந்தது ஒரு புதுமையேயாகும். கீழோர் தோழமையல்லவா குறைந்தொழியும் என்று பாடி இருக்கிறார்கள். 'உன் பெண்ணை என் மகனுக்குத்தான் கொடுக்கவேண்டும்''—''அப்படியே ஆகட்டும் அதற்கென்ன!'' என்றென்றோ இப்படி இருவருக்கும் பேச்சு நடந்ததாம். இன்றும் அந்த முடிவிலேயே இருந்தார்கள். ஆச்சரியந்தான்! சந்தர்ப்பவாதிகளின் சூதாட்டத்தால் — சூழ்நிலையின் சதியால் யாராவது ஏழையாகி விட்டிருந்தால்; பேச்செல்லாம் காற்றிலே பறந்தோடி விட்டிருக்கும். போன இடம் தெரியாமல் போய்விட்டிருக்கும். நிலைமை ஒன்றும் அவ்வளவு மோசமாகிவிடவில்லை. ஒரு தராசில் இரண்டு குடும்பங்களையும் வைத்து எடைபோட்டால் சரியாகவே இருக்கும்.

இறைவன் என்றொருவன் இருந்தால், அவனுடைய வஞ்சனையால் உற்பத்தியானவள் ஏழை. வயிறு காயும் அவள் வயிற்றில் பிறந்துவிட்ட இராதை, அழகில் 'ரம்பை'யாக' இருந்தாலும், கஷ்டப்பட்டுக் கணவனைக் கண்டுபிடிக்க வேண்டி இருக்கின்றது. கிடைப்பதும் அரிதாகவே போய் முடிகின்றது. கூனாக இருந்தாலும், குருடாக இருந்தாலும், நொண்டியாக இருந்தாலும், நோஞ்சானாக இருந்தாலும் சீமான் வீட்டுச் சுந்தரி விலையாகி விடுகிறாள். வாழ்வுகொடுக்க—இன்பத்தின் வாயிலைக் காட்ட அதற்கென்றே ஒற்றைக்காலில் தவமிருக்கும் 'வீரர்'கள் ஏராளம். இரண்டாவது இனத்தை நான் சேர்ந்தவள். சீமான் மகள் என்கிறேன். மற்றப்படி ஒன்றும் இல்லை. என்னை 'அழகி' என்றே செல்லமாக எல்லோரும் அழைப்பார்கள். பள்ளிப் பருவத்திலே என்னைப் பின் தொடர்ந்து, ஒரு பட்டாளமே பவனி வரும். என்னுடைய ஒரு புன்சிரிப்புக்காக, அவர்களுடைய கோமாளித்தனத்தையெல்லாம் விவரித்தால் உலகம் சிரிக்கும். அப்படி அவர்களை ஆட்டிப்படைத்தது என் அழகு. எல்லோருக்கும் அன்புப் பரிசாக ஏமாற்றத்தையே நான் அளித்தேன். ஆத்திரமடைந்த பித்தர்கள் வயிறெரிந்து இழிவான செயல்களில் இறங்கிவிட்டார்கள். கண்ணிருந்தும் குருடாய், காதிருந்தும் செவிடாய் நான் நடந்துகொண்டேன்.

என்னைக் கட்டிக்கொண்டுபோக, ஆண்கள் 'க்யூ' வரிசையில் முட்டிக்கொண்டு வந்தார்கள். அவ்வளவு பேரும் என் அழகிற்கும் இருந்த பணத்திற்கும் அடிமை. அந்த அழகும் பணமும் அழிந்துவிட்டால், அவர்களும் என்னை மறந்துவிடுவார்கள். அத்தகைய உத்தமர்கள்! யாரும் என் இதயத்தைத் தோண்டிப் பார்த்தார்கள் இல்லை. எல்லோரையுமே தந்தையார் விரட்டிவிட்டதற்கு இவையெல்லாம் காரணமில்லை. நண்பரின் மகன், தாலிகட்டவேண்டும் மகளின் கழுத்தில் என்றே, பெரிதும் அவர் பாடுபட்டார்; விரும்பினார். ஆகட்டுமென்றே நானும் இருந்தேன். ஆனால், இப்பொழுதோ நிலைமைமாறிவிட்டது. அப்பாவை மோசம் செய்துவிடுவேன் என்று தெரிகின்றது.

'அவரை'யே என்னுள்ளம் நாடுகின்றது. மாலை சூடி மணாளனாக ஏற்றுக்கொள்ள மனம் விரும்புகின்றது. "சொன்ன சொல் தவறாத உத்தமர்" — இதுவரையில் என் தந்தைக்கிருந்த புகழ்மாலை. இனிமேல் என்னால்தான் அதற்குப் பங்கம் வரும்போல் தோன்றுகிறது. வருத்தமாகத்தான் இருக்கிறது. வேறு வழி தெரியவில்லையே!

திடீரென்று புறப்பட்ட தந்தையார், இரண்டு நாளில் திரும்பி வந்து விடுவார் என்றே நினைத்தேன். அங்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. அஞ்சல் அட்டையில் உடனடியாக என்னையும் சென்னைக்கு வரச்சொல்லி எழுதிவிட்டார். தேவைக்கு மிஞ்சிய ஆடைகளையும் அணிகளையும் எடுத்துக்கொண்டு, தனிமையில் உற்சாகமாகப் புறப்பட்டுவிட்டேன். வழியிலொரு எக்கச்சக்கத்தில் மாட்டிக்கொண்டேன். என்னைப் பின் தொடர்வதையே தொழிலாக, ஒரு காமுகன் கொண்டுவிட்டான். என்னசெய்துவிடுவானோ என்று மிகவும் பயந்தேன். கயவனின் பார்வையிலிருந்து தப்புவதற்காக, நான் கையாண்ட உபாயங்கள் பலவும் விழலுக்கிறைத்த நீராயின. கை கொடுத்து உதவியது சோலையூர் இரயில் நிலையத்தில் செய்த தந்திரம்தான். பாண்டியர் தமிழ் வளர்த்த மதுரை நோக்கிச் செல்ல நின்றிருந்த, வண்டியின் பிளாட்பாரத்தில் போய் அலட்சியமாக உட்கார்ந்துவிட்டேன். 'வாலிறலி' உண்ணாவிரதம் நடந்துகொண்டிருக்கும சென்னை செல்லும் வண்டியிலிருந்து நான் இறங்கியதும், இனி என்னைத் தொடர்வதில் யாதொரு பயனுமில்லையென்று தன் விடாமுயற்சியைக் கைவிட்டு விட்டான். முட்டாளின் நெற்றியில் சாமர்த்தியமாக மூன்று நாமம் போட்டுவிட்டேன். வண்டி நகரும்போது வந்த வண்டியிலேயே ஏறிவிட்டேன். அப்போது என்னைப்பார்த்த பலரும் ஆச்சரியப்பட்டார்கள். அங்கேதான்நான் 'அவரை'க் கண்டேன். எனக்கிருந்த அந்தச் சங்கடத்தில் அழகரைச் சரியாகக் கவனிக்க இயலாமல் போய்விட்டது. ஆரம்பத்திலேயே நான் ஒன்றைச் சொல்லியிருக்க வேண்டும். எனக்குத் தாய் இல்லை. அதனாலே அறுசுவையொன்றும் என்னை விட்டுப் போய்விடவில்லை. ஆடப் பாட, அருகிருந்து கதை பேசி மகிழ்விக்க, குளிக்கவைக்க, கூந்தலை வாரி முடிக்க மங்கையர் பலர் எங்கள் வீட்டில் நிரந்தரமாகத் தங்கியிருந்தார்கள்.

எப்படியோ தில்லுமுல்லுகள் நிறைந்த சென்னைக்கும் வந்து, தந்தை கொடுத்திருந்த முகவரிப்படி வீட்டையும் கண்டுபிடித்து, அடியெடுத்து உள்ளே வைத்தேன். அப்பாவின் குரல் கேட்டது. மகிழ்ந்தேன். அவர் நண்பரும் சிரித்தவண்ணம் உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் எழுந்தோடி வந்து, மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

"வாம்மா, வா! எங்கே வராமல் இருந்து விடுவாயோ என்று நினைத்தேன்."

"என்னப்பா, அப்படிச் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் வரச்சொல்லிய பிறகுமா தவறுவேன்."

"எங்கே வழி தெரியாமல் இன்னல் படுவாயோ, என்ற பயமே எனக்குப் பெரிதாக இருந்தது."

"அப்பா! துணிச்சலும் தைரியமும் ஒருங்கே பெற்ற உங்கள் மகளைப்பற்றி, இப்படி நினைத்திருக்கக் கூடாது."

"என் மகளே! உன் திருமண விஷயமாய்..."

"அப்பா, அப்பா! அதைக் கொஞ்சம் நிறுத்துங்கள். நிலைமை இப்பொழுது கொஞ்சம் மாறியிருக்கிறது."

"என்னம்மா, சொல்கிறாய்? எனக்கொன்றும் சரியாகப் புரியவில்லையே! புரியும்படி கொஞ்சம் விளையாடாமல் கூறம்மா"

"ஒன்றுமில்லை அப்பா. நீங்கள் கேட்ட விஷயமாகத்தான் சொன்னேன். எல்லாம் பிறகு விவரமாகச் சொல்லுகின்றேன்"

அப்படி நான் சொல்லிவிட்டு அங்கிருந்து நழுவப்பார்த்தேன். அன்புத் தந்தைக்கு ஒரு பெரிய இடி தலைமேல் விழுந்ததுபோல் இருந்திருக்க வேண்டும். இரண்டு கைகளையும் நெற்றிக்கு மேலே வைத்துக்கொண்டு, பேசாமல் உட்கார்ந்துவிட்டார். அவர் எதிர்பார்க்கவில்லை. எதுதான் எதிர்பார்த்தபடி நடக்கிறது? எங்கோ ஒரு சிலருக்குத்தான் அதில் வெற்றி கிடைக்கிறது. மற்றவர்க்கெல்லாம் மீளாத துன்பம்தான் பரிசாகக் கிடைக்கிறது.

"வந்த களைப்பு. வெந்நீர் தயாராக இருக்கிறது. நன்றாகக் குளித்துவிட்டு, மாடியிலுள்ள அறைக்குப்போய் கொஞ்சம் படுத்துறங்கி, ஓய்வெடுத்துக் கொள்ளம்மா. ஏ, நாகப்பழம்! பேசாம பார்த்துகிட்டு நிக்கிறியே; குழந்தையை அழைச்சினுபோய் குளிப்பாட்டி தூங்கவையம்மா!" -வசந்த துரை அவர்கள்தான் இப்படி வாய்திறந்து சொன்னார்கள். அதைக்கேட்டு எனக்கு சிரிப்பே வந்துவிட்டது; சிரித்தேவிட்டேன். கள்ளமற்ற உள்ளம் கொண்ட அவர் மிகவும் நல்லவர், எதையும் அறியாதவர். எவரையும் எளிதில் நம்பிவிடுபவர், கொண்டவனைத் தவிர கண்டவனைக் கண்ணெடுத்தும் பார்க்காத குணசிலர்.

வேலைக்காரி நாகப்பழம் வந்தென்னை அழைத்துச் சென்றாள். எல்லாம் முடிந்து, மாடி அறைக்குள் நுழைந்தேன். அறிஞர்களின் படங்கள். அலங்காரத்திற்குப்பஞ்சமில்லை. எல்லாவற்றுக்கும்மேலாக நான் விரும்பும் கிராம்போன் அங்கிருந்தது. இருந்த இசைத் தட்டுகளும் எனக்குப் பிடித்தமானவைகளே. மனமோ சண்டையில் இறங்கிவிட்டிருந்தது. ஒன்றையும் உள்ளத்தில் நினையாமல் இருப்பதே உத்தமம். எதையாவது நினைத்துக்கொண்டாலே இந்தத் தொல்லைதானே! உண்ண முடிவதில்லை; உறங்கிட ஆவதில்லை; ஒழுங்காக எதையுமே செய்ய இயல்வதில்லை. மருத்துவமனையில் போய் வருடக்கணக்கில் விழுந்து கிடந்தாலும் குணமடையாதே! வேலைக்காரியை அழைத்து இசைத்தட்டைப் போடச்சொன்னேன். குறும்புக்காரியான அந்த நாகப்பழம், காதல் சொட்டும் பாடலையே வைத்து, என்னை வேடிக்கை செய்தாள். வந்த களைப்பு—உண்ட மயக்கம் — பாதி விழிகள் மூடின. மீதியும் சில விநாடியில் மூடிக்கொண்டன.

[அடுத்த இதழில் முடியும்.]

# இவர்கள் பேசினால்....!

## செய்தி

பம்பாய் மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் **பிரிஜ்லால் பியானி** என்பவர் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார். காரணம், மொழிவழி மாநிலம் அமைக்கப்படவேண்டும் என்று பம்பாயில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினாராம்!

## பம்பாய் முதலமைச்சர் **சாவன்**

M. S. **வெங்கடாசலம்,** M. A.

என்ன அரசியல் இது! எப்படியெப்படியெல்லாம் தொல்லைகள் வருகின்றன! எங்கெங்கிருந்து எதிர்ப்புகள்! யார் யார் குழிபறிக்கிறார்கள்— அதுவும், கூட இருந்துகொண்டே!

எதிரிகள், எதிர்க்கட்சிகளிலுள்ளோர் எப்படிச் செய்தாலும் கவலையில்லை — எதையாவது சொல்லி, எந்த வகையிலோ மழுப்பி, நிலைமையைச் சமாளித்துவிடலாம்! ஆனால், கூட இருந்துகொண்டே குழிபறித்தால் என்ன செய்ய முடியும்?

பம்பாய் மாநிலம், கடந்த மூன்று ஆண்டுகளாகப் பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள் பலவற்றைப் பார்த்த இடம்! பண்டித நேருவே பொதுக்கூட்டத்தில் பேச முடியாமல், தடுமாறிக் கொதிப்படையத் தக்கதோர் நிலையை உருவாக்கி, அகில இந்திய அரசியல் வானில் அழியாததோர் பகுதியைப் பெற்ற இடம்! எனக்கு முன்னாலே முதலமைச்சராக இங்கே கொலுவீற்றிருந்த மொரார்ஜிதேசாய் ஏறக்குறைய ஒரு வாரத்திற்கு மேல் உண்ணாவிரதமிருந்தும் 'ஐயனே, மெய்யனே! உண்ணா நோன்பைக் கைவிடுக'' என்று மனதாரச் சொல்ல, எவரும் முன்வாராததோர் இக்கட்டான நிலையினை உருவாக்கிய மாநிலம்!

இவ்வளவும், நடைபெற்றது எதற்காக? மராட்டியத்தையும் குஜராத் பகுதியையும் ஒன்றாக்கி "பம்பாய் மாநில''மாக, மத்திய அரசு அமைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்திடும் பொருட்டு, வேறல்ல!

இந்த எதிர்ப்பு நாளுக்கு நாள் வளருகிறது, வலுப்பெறுகிறது. கட்டுக்கோப்பும் எய்திய வண்ணமிருக்கிறது!

''மராட்டியத்தைத் தனியாகப் பிரியுங்கள்'' எனக் கோருவதற்கு **சம்யுக்த மகாராஷ்டிர சமிதி** — "குஜராத்தைத் தனி மாநிலமாக ஆக்கிவிடுங்கள்'' எனக்கோரி, அந்தக் கோரிக்கை வெற்றிபெற எதையும் செய்திடத் துணிந்து நிற்கும் **மகா குஜராத் பரிஷத்**— இரண்டு கட்சிகளும் இரண்டு முனைகளிலே தாக்குகின்றன காங்கிரசை!

சரியாகச் சொல்லப்போனால், பம்பாய் மாநிலத்தைப் பிரித்தாக வேண்டும் என்பதுதான் இந்த இரண்டு கட்சிகளின் அடிப்படை நோக்கம்!

இரண்டு "**கட்சிகள்**'' என்று இவைகளை அழைப்பதைவிட, இரண்டு "**குழுக்கள்**'' என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், இவை காங்கிரசல்லாத பல கட்சிகளின் கூட்டு அமைப்பு — கம்யூனிஸ்டுகளும் கைகொடுக்கிறார்கள், தங்களால் இயன்றவரை!

இந்தக் குழுக்களின் எதிர்ப்பைச் சமாளித்திட இந்த மாநிலத்துக் காங்கிரசுக் கட்சி படுகிற பாடு...... அப்பப்ப! எனக்கல்லவா தெரியும்?

சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டு டில்லி ஆட்சிப்பீடத்திலே உட்கார்ந்து கொண்டார்கள் மொரார்ஜிதேசாயும், எஸ். கே. பட்டீலும், இன்னும் சிலரும்!

இவர்களெல்லாம் தப்பித்துக் கொண்டார்கள் — துணையில்லாமல், இங்கே தினம்தினம் ஏற்பட்டு வருகின்ற சிக்கல்களையெல்லாம் சமாளிக்க வேண்டிய இக்கட்டான பரிதாபத்துக்குரிய நிலையில் நான் இருக்கிறேன்!

மொழிவாரி மாநிலம் தேவை— பம்பாய் துண்டாக்கப்படவேண்டும் — என்று எழுப்பப்படுகிற கோரிக்கை தினம் தினம் வளருகிறது! காட்டுத் தீபோலப் பரவுகிறது! பல்லாயிரக் கணக்கிலே மக்கள் அவர்களது கூட்டங்களுக்குச் செல்லுகிறார்கள் — ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கச் சித்தமாக இருக்கின்றனர்!

இதை எதிர்த்து, எந்தவித உருப்படியான துணையுமில்லாமல், இடிந்துவருகிற கோட்டைக்குள்ளே இருந்துகொண்டு, எவ்வளவு நாளைக்கு நான் போராட முடியும்?

இந்தப் போராட்டத்தில் காங்கிரசு ஏற்கனவே பல தோல்விகளைக் கண்டுவிட்டது! இடைத் தேர்தல் பலவற்றில் 'டிபாசிட்' இழக்காமல் நமது அபேட்சகர்கள் தப்புவதற்கே படாத பாடுபடவேண்டியதாகி விட்டது!

அதுவாவது பரவாயில்லை, அந்தந்தத் தேர்தல்களிலே காங்கிரசு தோற்றுவிட்டது என்ற

செய்தி. சில நாட்களுக்கு அடிபடும் —பிறகு அது மெள்ள மறைந்து விடும், மக்கள் மனத்திலிருந்து!

ஆனால்...! என்றும் அழியாத ஒரு நினைவுச் சின்னம்... பம்பாய் நகராண்மைக்கழகம் இருக்கிறதே ...அதைநினைத்தால்தான் நெஞ்சு வெடித்துவிடும்போல்இருக்கிறது. பம்பாய் நகராண்மைக் கழகத்தின் மேயர், மிராஜ்கார் என்பவர் ஒரு கம்யூனிஸ்டுக்காரர்— மகாராஷ்டிர சமிதியின் ஆதரவிலே வெற்றி பெற்றவர்!

இங்ஙனம் காங்கிரசு ஒவ்வொரு இடமாகக் கோட்டைவிட்டு வருகிறபோது கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டு நடந்தால் எப்படிச் சகிப்பது? இங்குள்ள ஒருவரே "ஆம், ஆம்! மொழிவாரி மாநிலம் தான் வேண்டும்" என்று, தனிப்பட்ட முறையிலோ, ஆட்சிக் கூட்டத்திலோ கூட அல்ல, பொதுக்கூட்டத்திலேயே; அதுவும் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கூட்டிவைத்துக்கொண்டு பேசினால் எப்படி நான் பொறுப்பேன்? என்ன ஆகும் காங்கிரசின் கதி? கோட்டைக்கு வெளியே இருப்பவர் குண்டு வீசிக்கொண்டு இருக்கும்போது, உள்ளே இருக்கின்ற ஒருவர் கடப்பாறையைக் கொண்டு கோட்டையைப் பிளந்தால் என்ன பொருள்?

இந்த மகத்தான துரோகத்தைத்தான் செய்துகொண்டிருந்தார் பிரிஜ்லால் பியானி என்பார்— காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களிலே ஒருவர்!

இந்த மாதம் 14ம் தேதி, பம்பாயில், ஒரு பொதுக்கூட்டத்தில் 'முழங்கி'னாராம், மொழிவாரி மாநிலம் அமைக்கப்பட்டே தீர வேண்டும் என்று!

இவரை, கட்சியை விட்டு வெளியே அனுப்பாமல் வேறென்ன செய்வது? கட்சியின் மானம் ஒருபுறமிருக்கட்டும், கட்சியையே காப்பாற்றுவதற்கு வேறு வழிதான் என்ன?

அதனால்தான் அவரை வெளியே அனுப்பினேன், நடப்பது நடக்கட்டும் என்ற துணிவோடு! இதில் தவறென்ன?

## பிரிஜ்லால் பியானி

பேசினேன் — தவறும்! ஆகாதாம்; அடுக்காதாம்! அவமானமாம் காங்கிரசுக்கு!

மொழிவாரி மாநிலம் வேண்டுமென்று பேசியது மகத்தான தவறும், மன்னிக்க முடியாத குற்றமாம்!

காந்தியார் அன்று போற்றிப் புகழ்ந்த திட்டத்தை, தேவையென்று அவராலே எடுத்துச் சொல்லப்பட்ட ஒரு அமைப்பை, ஆதரிக்கக்கூடாதாம்—இன்று!

ஐயோ......காலமே! காந்தியார் வளர்த்த காங்கிரசு, வெளிப்படையாக ஒளிவு மறைவு இல்லாமல் கூறுகிறது, அவராலே அன்று போற்றிப் புகழப்பட்ட திட்டம் இன்று காங்கிரசுக்காரராலே பேசப்படக்கூடாதென்று—பேசிய 'குற்ற'த்திற்காகப் பழிவாங்கப் பட்டிருக்கிறேன் நான்—கட்சியை விட்டே வெளியேற்றப்பட்டுவிட்டேன்!

பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாயின் ஆணையை நிறைவேற்றத் தனயன் முற்படக்கூடாதாம் — ஆணையிடுகின்றனர் ஆட்சிப்பீடத்திலே அமர்ந்துவிட்ட காங்கிரசார்!

மொழி, மொழி என்று பேசுவது 'குறுகிய' நோக்கமாம்— கருத்துக் குருடர்களின் வழியாம் — அன்னை பாரதத்துக்குச் செய்கின்ற 'துரோக'மாம்! என்ன விந்தை இது!

அணுகுண்டு, ஹைடிரஜன் குண்டு, சீட்டா, ஸ்புட்னிக்—இப்படி எத்தனை எத்தனையோ புறப்படுகின்றன, இருபதாம் நூற்றாண்டின் அதிசயங்கள் என்று! ஆனால் இவையெல்லாம் இன்றைய காங்கிரசின் போக்கை விட அதிசயமாகவா இருக்க முடியும்?

பாரதம் ஒன்று — நாமனைவரும் சோதரர்—நமக்குள்ளே பேதமா, பிளவா — அது ஆகுமா, அடுக்குமா — என்று கேட்பவர்களைப் பற்றியும், அந்த வாதங்களைப் பற்றியும் நான் அடிக்கடி எண்ணிப் பார்க்கிறேன்!

ஒன்றாகவே இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம் — எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை!

கருத்தறிவிக்கின்ற நிலையிலும் நானில்லை!

ஆனால் 'நாமனைவரும் ஓரினம்' என்ற எண்ணம் எங்கே உருவாகியிருக்கிறது? உதாரணம் ஒன்றாவது கிடைக்குமா நமக்கு?

மற்ற மாநிலங்களைப்பற்றிப் பேசுவானேன், பம்பாய் மாநிலம் ஒன்று போதுமே, எனது வாதத்தை மெய்ப்பிக்க!

இந்த மாநிலத்தைப் பிரித்து விடுங்கள், மொழி அடிப்படையிலே மாநிலங்களை உருவாக்குங்கள், என்ற கிளர்ச்சி, அல்ல அல்ல. கோரிக்கை, நாளுக்கு நாள்வலுத்துவருகிறதே, இதற்கு என்ன பொருள்?

கொஞ்ச நாட்களுக்கு முன்னால் வரையிலாவது மகாராஷ்டிரம் என்றும், குஜராத் என்றும் இரண்டு மாநிலங்கள் அமைத்திட வேண்டுமென்று மட்டுமே கோரிக்கை எழுப்பப்பட்டது— இப்போது மகாராஷ்டிரத்துக்குத் தெற்கேயுள்ள விதர்ப்பம் பகுதியையும் தனி மாநிலமாக ஆக்கவேண்டும் என்றுமல்லவா போராட்டம் நடைபெறுகிறது?

நானே அந்த விதர்ப்பா பகுதியைச் சேர்ந்தவன். எங்கள் பகுதியில் போராட்டம் துவங்கப்படுவதற்கு முன்னால் வாய்மூடி மௌனியாகஇருந்தேனென்பதென்னவோ உண்மைதான்! ஆனால் என் பிறந்த இடத்திலேயே, இந்தக் கோரிக்கை வலுப்பெறும்போது, நானெப்படி மௌனம் சாதித்திட முடியும்.

எனவே, இவ்வளவு காரணங்களையும் மனதிலே வைத்துக்கொண்டுதான் பம்பாய் பொதுக்கூட்டத்தில் பேசினேன், மொழிவாரி மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்று!

எனக்கு இத்தகைய துணிவு ஏற்பட்டதற்கு மற்றொரு முக்கியமான காரணமும் உண்டு!

ஏறக்குறைய ஏழெட்டு மாதங்களுக்கு முன்னால், கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில், எங்கள் பகுதியைச் சேர்ந்தஒருவர், டாக்டர்ஆனே என்பார்—விதர்ப்பம் தனி மாநிலமாக அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார் பொதுக்கூட்டமொன்றில்!

அவர் சாதாரணரல்ல—பீகார் மாநிலத்தின் கவர்னராக இருந்தவர்!

அந்தப்பெரிய மனிதரே மொழி வழி மாநிலத்திற்கு ஆதரவாகப் பேசியிருக்கும்போது, எனக்குத் துணிவு பிறப்பதிலே வியப்பென்ன?

இங்ஙனம் பேசியதற்காக அவர் கண்டிக்கப்படவில்லை, தண்டிக்கப் படவில்லை! மாறாக, அண்மையிலே நடந்த பாராளுமன்ற உப தேர்தலில் காங்கிரசு அவரை அபேட்சகராக நிறுத்திவைத்தது—இன்று அவர் பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர்!

அங்ஙனமிருக்க, என் மீதுமட்டும் நடவடிக்கை எடுக்கக் காரணம் என்ன?

அவர் எழுப்பிய குரலையேதான் நானும் எழுப்பினேன்! அவர் பேசிய இடம் அகோலா என்ற ஊர், நான் பேசியது பம்பாயில்— இதைத் தவிர வேறுபாடு இல்லை எங்கள் இருவரது நிலைமையிலும்!

இருந்தும் அவருக்குப் பதவியும், எனக்கு 'போ வெளியே" என்ற ஆணையும் தரப்படுகிறதென்றால், இதில் வேறு ஏதோ சூதாட்டம் இருக்கிறதென்று தானே நான் கொள்ளமுடியும்?

அவர் பெரிய மனிதர், அவரை வெளியேற்றினால் அவரது குரல் கொஞ்சம் வலிவடையும்; எனவே அவருக்குப் பதவியைக் காட்டி, ஆசாபாசங்களை மூடி மறைத்து நிலைமையைச் சமாளிக்கவேண்டும் என்ற எண்ணம் காங்கிரசின் தலைமைப்பீடத்திற்கு ஏற்பட்டிருக்க வேண்டும், அவரைப் பொறுத்த வரையில்!

ஆனால் நான்......சாதாரணன்! இந்த உபகண்டத்தில் என் பெயரை அறிந்தோர் மிகக்குறைவு என்ற துணிவிலல்லவா என்னை வெளியேற்றி இருக்கிறார்கள்!

இருக்கட்டும்! நடப்பது நடக்கட்டும்! பொறுத்திருப்போம் — காலம் மாறும் — காந்தியாரின் திட்டம் நிறைவேறுகின்ற நாள் வந்தே தீரும்!

**காமராசர்**

வெளியே அனுப்புகிறார்களாம், வெளியே! எதற்கு? எல்லாம் தெரியாத்தனம்! ஏன் வெளியே அனுப்ப வேண்டும்?

என்னமோ பேசினாராம்! பேசட்டுமே! குடியா முழுகிவிடும்? வேண்டுமென்னும்போது கைதூக்கினால் சரிதான்! அதுதானே முக்கியம்!

அது தெரியாமலா 'ராஜாசர்'ரைக் காங்கிரசிலே சேர்த்தேன். காங்கிரசுக்கு வைரியாக இருந்த ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்தவராயிற்றே அவர் என்று ஒதுக்கியிருந்தால், இன்று 'கைதூக்கு'வதற்கு ஒரு ஆள் குறைந்து இருக்குமே!

காங்கிரசில் சேர்ந்த பிறகும் அவர் சும்மாவா இருக்கிறார்! வடக்கு — தெற்கு, என்றுகூடத் தான் பேசுகிறார்! அதற்காக?

என்னமோ எல்லைப் போராட்டமாமே! அதிலே 'குதித்த' விநாயகம், காங்கிரசில் இல்லையா இப்போது? அவர் கையைத் தூக்கினால், சபாநாயகர் அவர் கையை எண்ணாமலா விட்டுவிடுவார்? இராமசாமிப்படையாச்சி யார்? மாணிக்கவேலர் யார்? இவர்களையெல்லாம் கட்சிக்குள்ளே சேர்த்துவைத்திருக்கிறேன் என்றால், தெரியாமலா செய்கிறேன்! இதல்லவா இராஜ தந்திரம்?

இவ்வளவு பேர் கைதூக்குவதற்கு இருக்கிறார்கள் என்ற தைரியத்தில்தானே நான் நினைத்ததைப் பேச முடிகிறது! இதுவரை வாயைத் திறக்காத நான் இப்போது எப்படித் தைரியமாகப் பேசுகிறேன்!

போகிற இடத்திலெல்லாம் இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு 'பிடி' பிடித்துவிட்டுத் தானே வருகிறேன்.

சமீபத்தில்கூட அவர்களைப் பிச்சைக்காரர்களுக்கு ஒப்பிட்டுப் பேசினேன் என்றால், எந்தத் தைரியத்தில்?

அப்படிப் பேசினால் நீ வேண்டாம் — இப்படிப் பேசுவதாயிருந்தால் வெளியே போய்விடு — என்று ஒவ்வொருவராக அனுப்பிக்கொண்டே வந்தால் கடைசியிலே யார் மீதமிருப்பார்கள்? எப்படிக் காங்கிரசுக்கு இந்தப் பலம் நிலைக்கும்?

சமீபத்திலேகூட ஒரு எம். எல். ஏ. காங்கிரசு மேடையை திராவிட கழகத்து மேடையாக நினைத்துக்கொண்டு, சென்னையில் பேசிவிட்டதாகக் கேள்வி! அதற்காக அவரைக் கட்சியிலிருந்து அனுப்பிவிடுவதென்றால், எப்படிக் காங்கிரசு மந்திரிசபை நிலைக்கும்?

கட்சிக்கு ஆள் சேர்க்க, இப்போதெல்லாம் நாம் படுகிற பாடு என்ன! இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா பம்பாய் முதல் மந்திரி! பாவம்! 'இராஜ தந்திரம்' தெரியாதவர்.

ஆந்திராவில் காங்கிரசு எம்.எல்.ஏ.க்கள் 30 பேருக்குமேல் கட்சியை விட்டு வெளியேறி, புதிய கட்சியே ஆரம்பித்துவிட்டார்களே, அந்த நிலைமையைச் சஞ்சீவிரெட்டி எவ்வளவு சாமர்த்தியமாகச் சமாளித்திருக்கிறார்!

வருகிறவர்களெல்லாம் வாருங்கள், வழி திறந்திருக்கிறது, என்றல்லவா வெளிப்படையாகச் சொல்லுகிறார். சோஷியலிஸ்டாக இருந்தாலும், சுயேச்சையாக இருந்தாலும் யாராக இருந்தாலும் வாருங்கள் என்று 'இழுத்து'க்கொள்கிறாரே, அதுவல்லவா இராஜதந்திரம்!

இதையெல்லாம் செய்யத் தெரியாததால்தான் மைசூரில் நிஜலிங்கப்பா கவிழ்ந்தார் — இப்போது ஜட்டி முதல் மந்திரியாக ஆகிவிட்டார்!

இதையெல்லாம் பார்த்துமா, இப்படித் தெரியாத்தனமாக நடந்துகொள்வது?

"காங்கிரசைவிட்டு வெளியேறியவர்களெல்லாம் வாருங்கள், வாருங்கள்" என்று அழைக்கிறாரே இந்திரா காந்தி — அவர் என்ன ஒன்றும் தெரியாதவரா?

இப்படி ஆள்தேடும் படலம் ஏற்பட்டிருக்கும் இந்தப் பரிதாபகரமான நிலையிலா இவ்வளவு அவசரப்பட்டு வெளியே அனுப்புவது!

எதற்கும் இராஜதந்திரம் வேண்டும், இராஜதந்திரம்! ஆமாம்! என்னைப் பாருங்கள்!!

★

# கனவான் காமராஜ்!

**சி. என். ஏ.**

## கனவானாகியிருக்கிறார்.

காமராஜர்! யாராவது அப்படியொரு பட்டம் சூட்டினரோ, பரிபாலிக்க 'ஜமீன்' ஏதாவது பெற்றாரோ என எண்ணவேண்டாம். பிரபுக்கள் மட்டுமே பேசிப் பழக்கப்பட்ட வார்த்தைகளை அள்ளி வீசத் துணிந்திருக்கிறார்!! பாட்டாளிகளின் வர்க்கத்தைச் சேர்ந்தவன், மக்களின் தொண்டன், சுகதுக்கத்தைப்பற்றிக் கவலையில்லாதவன், என்று இது நாள்வரை சொல்லிவந்தவர்; புதுக்குரல் கொண்டிருக்கிறார்; பூகம்பமெனச் சீறுகிறார். தவறான கருத்தும் தப்புக் கணக்கும் எரிச்சலை உண்டாக்குமென்பார்கள். 'முகமூடி' கிழிகிறது. மூர்க்கத்தனத்தின் செல்லப் பிள்ளைகளான பிரபுக்களின் 'வாடை' வீசுகிறது பேச்சில்! 'பெரிய ஆள்' ஆகிவிட்டதாகக் காட்டுகிறார்!!

திராவிட முன்னேற்றக் கழகத்தை, தெருப்பாடகருக்கும் பிச்சைக்காரர்களுக்கும் ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார், இந்தப் பிரபு! கையேந்தி நிற்கும் பிச்சைக்காரர்கள் இனிமையான பாட்டுக்களைப் பாடுவர்; அதைக்கேட்டுக் கூட்டம் கூடும்; கூட்டத்திலுள்ள சிலர், காலணா அரையணாக்கள் கூடப் போடுவர்; ஆனால் அந்தக் கூட்டம் பிச்சைக்காரர்கள் சொல்கிறபடியா நடக்கும்? அதுபோல, தி. மு. க-விலுள்ள தோழர்களும் தோழியரும் பேசும்போது அவர்கள் பேச்சைக் கேட்கக் கூட்டம் கூடுகிறது, ரசிக்க! பேச்சு முடிந்ததும் போய்விடுகிறதே ஒழிய, அந்தக் கும்பல், தி. மு. க-வுக்கு ஓட்டுப் போடாது என்கிறார்.

பிச்சைக்காரர்களாம், தி. மு. க! பிரபுவின் இடத்திலிருந்து கொண்டு பேசுகிறார் பெம்மான்!! ஏளனத்துக்கும் எள்ளி நகையாடவும் பயன்படும் பிச்சைக்காரர்களிடம், மக்களைக் கவரக்கூடியளவுக்காவது 'இனிமைகுரல்' இருக்கிறது! இந்தப்பிரபுவிடம், மக்கள் மலைக்குமளவுக்கு என்ன இருக்கிறதோ, யாமறியோம்!! சந்தர்ப்பம் காரணமாக இந்தப் பிரபுவுக்குச் சிம்மாசனம் கிடைத்திருக்கிறதேயொழிய, நாட்டுச் சூழ்நிலை இவருக்கு உதவாமலிருந்தால் மகானுபாவன் எங்கிருப்பாரோ; எப்படியிருப்பாரோ. இருந்தார் பல்லாண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக. யாராவது இதைச் சொன்னால்தான் தமிழகத்துக்குத் தெரியுமே ஒழிய, டில்லி மண்டபத்தில், இவர் திறந்ததில்லை வாயை. எப்போதாவது பேசுவார். அதுவும் எங்கே? வெளியே! துண்டுக் கேள்விகூடக் கேட்டதில்லை மரத்துண்டுபோல வாய்மூடி மௌனியாகியிருந்ததுதான், இவர் எம். பி-யாகிச் சென்றிருந்த பலன்.

காங்கிரஸ் முரசம் கிழிக்கப்பட்டு என்னாகுமோ என்கிற கவலை குடைந்து கொண்டிருந்தபோது, இந்த மாநிலத்தின் ஆட்சிச் செங்கோலைப் பிடிக்க, ஆச்சாரியாரிடம் ஓடினார்களே ஒழிய, இந்த வீராதி வீரர் தேவைப்படவில்லை! இவரைப்பற்றி மேலிடமும் சரி, இங்கிருக்கும் 'இடமும' சரி எண்ணவில்லை!!

ஆட்சிக்கு இவர் வருமுன் உண்டான சூழ்நிலைகளும், பிரச்சினைகளும் ஏராளம். இந்த உயர்ந்த உருவத்தின் உள்ளமோ, மூளையோ ஒரு சிறிதும் பயன்படவில்லை, அப்போது.

முதலமைச்சரானார்! மோகனம் பாடுவோரும், 'முகதுதி' பண்ணும் கும்பலும், அறுவடையை எண்ணி, இவரை, ஆலவட்டம் சுற்றலாயினர். அவர்கள் 'சொல்லியதை' நம்பிவிட்டார் போலும்! நம்மை விடப் பெரிய ஆளேது என்கிற எண்ணம் இதயத்தில் உருவாகி, அதன் காரணமாகவே, அதட்டும் குரலையும் அவமரியாதையான பேச்சுக்களையும் பேசத் துணிவு பிறந்திருக்கிறது, இந்த விருதுப்பட்டியாருக்கு. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைப் பிச்சைக்காரர்களென்கிறார்! இப்படிப் பேசுவதுதான், 'பெரிய மனிதத் தன்மைக்கு' அடையாளம் என்றெண்ணுகிறார்!!

சாமர்த்தியத்தாலோ, அல்லது சந்து வழிகள் மூலமோ, எதைக் கொண்டாயினும், அரசியல் பீடத்தில் அமருவோருக்கு, ஆற்றலில்லையெனினும், பிறரை மதிக்கும் பெருங்குணமும், குரல் தடிக்காத நல்ல புத்தியும், ஏற்பட வேண்டும். மக்கள் மன்றத்தில் தனக்கு நல்ல பெயர் ஏற்படச் செய்ய வேண்டுமானால், காமராஜருக்கு உள்ள ஒரேவழி, தன்னடக்கமும் பணிவும்தான்! ஏனெனில், சிறந்த அரசியல் மேதை

எனும் பெயரோ, நிர்வாகப் புலி எனும் நீண்டநாள் வரலாறோ, பெற்றவரல்ல அவர். பிரச்சினைகளைப் பிடுப்பிட்டுத் தீர்த்துவிடும், செயலாளர் என்று தன்னை அவர் சொல்லிக்கொள்ள முடியாது. பிரச்சினைகளை, ஒத்திப்போடுவதிலும், தட்டிக்கழிப்பதிலும் வேண்டுமானால் அவர் சாமர்த்தியசாலி! அப்படிப்பட்டவர் மமதைத் தேரேறி மார்தட்டுகிறார் என்றால், தான் வளர்ந்துவந்தமார்க்கத்தை மறந்துவிட்டு, தலைகுப்புற விழவிரைகிறார் என்றே எண்ணுவர் நல்லோர்.

ஆச்சாரியார் காட்டிய 'ஒட்டாத போக்கு' கண்டு உள்ளம் உடைந்திருந்த தமிழர்களுக்கு, காமராஜர் ஆட்சிக்கு வருகிறார் என்றதும், ஒருவிதமான அகமகிழ்ச்சியும், உள்ளக்களிப்பும் உண்டாயிற்று. சாதாரணமானவர், சாதாமக்களுடனேயே இருப்பதில் மகிழ்பவர், நமது சுகதுக்கங்களையெல்லாம் அறிந்தவர், நம்மில் ஒருவர், நம்மைப்போன்ற ஒருவர், ஆளவருகிறார் என்று எண்ணினர் மக்கள். காமராஜருடைய, கூர்த்த மதிகண்டோ, விளைத்த சாதனைகளைக்கண்டோ, மக்கள் மயங்கவில்லை. சாதாரணமானவர், ஆட்சிக்கு வந்தார், சாமான்யர்களில் ஒருவர் எனத் தன்னைக் காட்டிக்கொண்டதால்! 'சாதாரணமானவன்' என்கிற எண்ணம் மாறி, 'தடித்த குரலிருக்கிறது எனக்கு' எனும் கர்வம் தலைக்கு ஏறும்போது, சகிக்கமுடியாது என்பது மட்டுமல்ல, மக்கள்மன்றத்தையே ஊசிகொண்டு குத்துவதாகும்.

மக்களையா ஏளனப்படுத்திப் பேசினார், தி. மு. க.வுக்குத்தானே 'குழி' தோண்டினார் என்று சிலர் எண்ணக்கூடும்; கேட்கவுமகூடும். முதலமைச்சராக இருப்பவர், ஒரு மாநிலத்தின் நன்மை தீமைகளைக் கணிக்கும் பொறுப்பிலே உட்கார வைக்கப்பட்டிருப்பவர், அட்டகாசமாகப் பேசுகிறார் — தி. மு. க. போன்ற ஒரு இயக்கத்தைப் பிச்சைக்காரர்களுக்குச் சமானமாக எண்ணுகிறார் — என்றால், என்ன பொருள்? ஆட்சிக்கு வந்த பிறகுதான் என்கிற தைரியமும், தட்டிக்கேட்க யாரால் முடியும் என்கிற குணமும், கொண்டுவிட்டார் என்பதுதானே! தி. மு. க. வளர்ந்துவரும் ஒரு இயக்கம், பாமரர்கள் மட்டுமின்றிப் படித்தோரும் பங்குகொள்ளும் ஒரு அரசியல் கட்சி என்பதை, யாரும் மறுக்கமாட்டார்கள். தாக்குவோருக்குப் பதில் சொல்ல தன்னிடம் வசதிகள் பெருமலிருக்கலாம்! அதனால், தரங்கெட்டது என்று யாரும் சொல்ல முடியாது!! காங்கிரசும், திராவிடகழகமும் ஒன்று சேர்ந்துவிட்டது—நடக்க முடியாதது ஏற்பட்டிருக்கிறது — நாளைக்குப்பார், பொதுத்தேர்தலில், இரண்டும் சேர்ந்து இந்த தி. மு. க.வை ஒழித்துக்கட்டப்போகிறது, என்கிறார்கள். அப்படிச் செய்ய முடியும் என்கிற ஆசையில்தான், காமராஜர் நாடினார் பெரியாரின் உதவியை. கண்டதென்ன!! பொதுத்தேர்தலில் பதினேழு இலட்சம் வாக்குகளைப் பெற்றுக்காட்டியது, தி. மு. க. செல்வாக்கும் சீமான்களும் நிரம்பியிருந்தும், பல தேர்தல்களிலே பழக்கப்பட்டிருந்தும், காங்கிரஸ் பெற்றது ஐம்பது இலட்சம் வாக்குகள் தான். இதை மறந்துவிட்டு, பிச்சைக்காரனின் பாட்டுக்கு, ஒரு விடுதலை இயக்கத்தின் இலட்சியத்தை ஒப்பிடுவது, அரசியல் அறியாத்தனம் அன்றி, வேறென்ன.

'பிரபு' மைதானத்திலே மார்தட்டி பேசுகிறார்! அவர் தளபதி, "தோல்வி பல கண்ட சூரர்" சுப்பிரமணியமோ, அரசியல் மேதையின் அங்கி பூண்டு, ஒத்துழைப்பைத் தாரீர், உங்களுடைய ஒத்துழைப்பெல்லாம் கிடைத்தால்தான் நாட்டின் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று, அன்பழைப்பு விடுக்கிறார்.

"கட்சிப் பிரச்சினைகளாகக் கருதாமல், தேசியப் பிரச்சினையாக எண்ணி, எல்லோரும் ஒன்றுபட்டுப் பணியாற்றவேண்டும். ஆகவேதான் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பையெல்லாம் கோருகிறேன்", என்று சட்டசபையிலே, கனிவு ததும்ப அழைக்கிறார், நிதியமைச்சர்.

சட்டமன்றத்துக்கு வெளியே, புதிதாகப் பெற்ற அந்தஸ்தை, காட்ட முனைகிறார் முதலமைச்சர்! அவருடைய பிரதம சீடரோ, அன்பழைப்பு விடுக்கிறார்!! வெளியே பிச்சைக்கரர்கள் என்கிறார், காமராஜர். சட்டமன்றத்தில், அந்தப் பிச்சைக்காரர்களின் உதவிதேவை என்கிறார் சுப்பிரமணியம். பேச்சைக் கேட்டுவிட்டுப் போய்விடுவார்கள் மக்கள், என்கிறார் அந்தப் பிரபு. அந்தப் புதிய புத்தரோ, உங்கள் ஒத்துழைப்பும் வேண்டும் என்று உருக்கமாகத் தெரிவிக்கிறார். கதகளி ஆடுகிறார்காமராஜர்! பரதநாட்டியம் ஆடுகிறார் சுப்பிரமணியம்! 'சங்காரமூர்த்தி' வேடம் புனைகிறார் முதலமைச்சர்! நிதியமைச்சரோ 'சமாச மூர்த்தி'யாகிறார், இங்கே!!

"அடிக்கடி, எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புத் தேவை, என்று ஆளுங்கட்சியினர் கேட்கிறார்கள். அவர்கள் உண்மையாகவே, கேட்கிறார்களென்றே மதிக்கிறேன்; அதனால், அது சம்பந்தமான என கருத்துக்களையும் தெரிவிக்கிறேன்.

போடப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற எதிர்க்கட்சிகளை


"Homeland"

ஏஜண்டுத் தோழர்களுக்கு

1—4—59 முதல் புதுக்கணக்குப் போடுவதால், 31—3—59 வரையுள்ள பாக்கி முழுவதையும் 5—4—59-க்குள் அனுப்பிவைக்கும்படி விற்பனையாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"ஹோம்லண்ட்"
சென்னை-6.

துழைக்கிறார்களே ஒழிய, திட்டங்கள் தீட்டப்பட்ட நேரத்திலே, எங்களை எந்த யோசனையும் கேட்டதில்லை. எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை அறிவது அவசியம் என்றுகூட அவர்கள் எண்ணவில்லை.

ஒத்துழை! ஒத்துழை! என்கிறார்களே ஒழிய, எந்தவிதமான ஒத்துழைப்பை அவர்கள் கேட்கிறார்கள் என்பதைப்பற்றியும், தெளிவுபடுத்தவில்லை. சட்டத்துக்கு மதிப்பளித்து மக்கள் நடக்கும்படி செய்யவேண்டியது என்பது, அவர்கள் கோரும் ஒத்துழைப்பிலே ஒருவகை என்று என்னைப் பொறுத்தவரையில் கருதுகிறேன். இது சரியென்றால், எல்லா எதிர்க்கட்சிகளும், ஆள்வோருடன் ஒத்துழைக்க அட்டியில்லை.

இவர்களின் திட்டங்களிலுள்ள சந்து பொந்துகளை எடுத்துக் காட்டுவதோ, அதுபற்றி விமர்சிப்பதோ, கூடாது என்று ஆளும் கட்சியினர் கருதுவார்களானால், நான் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஜனநாயக அமைப்பில், அப்படிப்பட்ட ஒத்துழைப்பை எதிர்க்கட்சிகளிடமிருந்து எதிர்பார்க்கக்கூடாது.

எதிர்க்கட்சிகளைப்பற்றி, ஆளுங்கட்சியினர் என்ன எண்ணுகிறார்கள் என்பதை அறிவேன். அண்மையில்கூட, நமது உள்நாட்டுத் துறை அமைச்சர் சொன்னாராம், "இந்த மாநிலத்திலுள்ள எதிர்க்கட்சிகள் எதுவும் தமது கடமைகளைச் வரிவரச் செய்வதில்லை" என்று. இப்படிச் சொல்லிவிட்டு, ஒத்துழைப்பைக்கொடு, என்றால் என்ன பொருள்? அவர்தான் அப்படிப் பேசுகிறார் என்பதல்ல! நமது முதலமைச்சரும் ஒரு பொதுக்கூட்டத்தில் தி.மு.க.வை தெருவில் பாடும் பிச்சைக்காரர்களுக்கு ஒப்பிட்டாராம்!!

இப்படியெல்லாம் பேசிக்கொண்டு, ஒத்துழைப்பைத்தா, என்றால் அவர்கள் கேட்பது உண்மையென்று எப்படி நம்புவது?

இருந்தாலும், நல்ல காரியங்களோ, நாட்டுக்குத் தேவையானவைகளோ செய்யப்படும்போது எங்கள் ஒத்துழைப்பை, நாங்கள் தந்தே வந்திருக்கிறோம். மதுவிலக்கு வெற்றிபெறவேண்டுமென்பதில், சட்டசபைக்குள்ளும் சரி, வெளியிலும் சரி, தி. மு. க. தன் ஒத்துழைப்பைத் தந்தே வந்திருக்கிறது.

ஒன்று, சட்டமன்றத்திலே, எடுத்துச் சொன்னேன். காமராஜரும், எதிரில்தானிருந்தார். பேசாமலிருந்தாரே ஒழிய, தான் பேசவில்லையென்று கூறவுமில்லை. பேசியதற்காக வருத்தம் தெரிவிக்கவுமில்லை. அவருடைய மவுனத்துக்குக் காரணம்,

அலட்சியம்
அருவை
அல்லது
ஆழ்ந்த சோகம்

ஏதாவது காரணமாயிருக்கலாம். எது காரணம் என்பதைப்பற்றி அக்கறையில்லை, நமக்கு. ஆனால், சிந்தித்துப் பார்க்குமாறு, மக்கள் மன்றத்தை மட்டும் வேண்டுகிறோம். முதலமைச்சரும் அவரது பரிவாரங்களும் ஒரு பக்கம் நம்மை இப்படிப்பேசிக்கொண்டும், அதே சமயத்தில் இன்னொரு பக்கம், எங்கள் திட்டங்களுக்கு ஒத்துழையுங்கள் என்று கேட்பதுமாக இருந்தால், என்ன எண்ணுவது நாம்? எப்படி நம்பமுடியும்? ஒத்துழைப்பு என்பது சரிசமமான இருவர் தருவது! பிரபுவும் பிச்சைக்காரனும் எப்படி ஒத்துழைக்க முடியும்!! இந்தப் பிச்சைக்காரர்களைப் பார்த்து தனது சுகாவை ஒத்துழைப்புக் கேட்கச் சொல்லலாமா, காமராஜ் கேட்கும்போது தடுக்காமல் இருக்கலாமா? அங்கு அப்படி! இங்கு இப்படி!! என்றால், இவர்களைப்பற்றி, என்ன எண்ணுவர் மக்கள்.


## SHORT COURSES

IN AUTOMOBILE & RADIO SERVICE ENGINEERING

CONDUCTED FROM 26th APRIL 59 TO 2nd WEEK OF JUNE, 59

INTERVIEW: From 23rd to 25th April 59.

QUALIFICATIONS: Intermediate or pre-University or above with good marks in Mathematics, Physics and English. A few S. S. L. C. students with best marks also can be considered.

Apply with 2 passport size photographs, health certificate, entrance fee of Rs. two by M. O. and marks list of the last or previous examination.

Some concessions will be given to Lady Students.

Apply to:

I. L. W. A. Ltd., "Gopal Bagh" COIMBATORE.

Telephone: 40
Telegrams: "ILWA"

G. D. NAIDU,
President.